

ஈரல் குலை

கட்டிவியாதிகள்

குணப்படுத்த முடியும்

கீழ்கண்ட அறிகுறிகள் சந்தேகிக்க கூடியவை



ஆரம்பத்திலேயே ஜாக்கிரதை வேண்டும்

ஜம்மியின் லிவர்க்யூர்

குழந்தையின், ஈரல் குலைகட்டிக்கு ஜம்மியின் லிவர் க்யூர் உபயோகியுங்கள். எல்லா இடங்களிலும் விற்கப்படுகின்றன.

விவரங்களுக்கு:

ஜம்மி வெங்கட்ரமணய்யா & சன்ஸ்

லிவர்க்யூர் க்ளினிக் & ஆபீஸ்

மயிலாப்பூர் :: மதராஸ்

அல்லது

பெரிய தெரு, கும்பகோணம்

அல்லது

தெப்பக்குளம், திருச்சினாப்பள்ளி

அல்லது

ஆர்காடு ஸ்ரீனிவாசாச்சாரி தெரு, பெங்களூர் ஸிடி

அல்லது

பம்பாய் ஆபீஸ்:

பரேக் மான்ஷன், சாண்டர்ஸ்ட் ரோடு, வெஸ்ட் பம்பாய்-4


LUX
TOILET SOAP
"அழகையளிக்கும் உத்தமமான சோப்
லக்ஸ் டாய்லட்"
என்கிறார்
ஊர்மிளாதேவி
சினிமா நட்சத்திரங்கள் விரும்பும்
அழகையளிக்கும் சோப்!

கல்கி

பொருளடக்கம்

மலர் 6 | இதழ் 3 | 1946 ஆகஸ்டு 18 | வியய ஆவணி 2

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.

அதோ பின்னணியில் தெரிகின்றதே, அந்தக் கட்டிடத்தைத் தமிழ் நாட்டில் பிறந்தவர் யாரும் சுலபமாக இனம் கண்டுபிடித்து விடுவார்கள். சரித்திரத்திலும் புராணத்திலும் புகழ்பெற்ற திரிசிராப்பள்ளி மலைக்கோயில் அதுதான்! முன்னணியில் இருக்கும் கட்டிடமோ மேற்படி மலைக்கோயிலைப் போலவே புகழுக்கும் பூஜைக்கும் உரியதான கலைக்கோயில். திருச்சி நேஷனல் காலேஜ் என்று பெயர் பெற்றது. அறுபது வருஷத்துக்கு முன்னால் சில பரோபகார சீலர்களின் உள்ளத்திலே இந்தக் கலைக்கோயில் தோன்றியது. அதிலிருந்து நாளுக்கு நாள் வளர்ச்சி யடைந்து இந்த வருஷத்தில் வைர விழாக் கொண்டாட்டமும் நடக்கப்போகிறது. ஆனாலும் இந்த மகத்தான ஸ்தாபனத்துக்கு இன்னமும் எவ்வளவோ வளர்ச்சி பாக்கி யிருக்கிறது. எவ்வளவு பாக்கி என்பதை அதே திருச்சி நகரின் நேஷனல் காலேஜுக்குக் கூப்பிடு தூரத்தில் அமைந்திருக்கும் ஸெண்ட் ஜோஸப் காலேஜ் கட்டிடங்களைப் பார்த்து அறியலாம்.



ஆஹா! அந்தக் கட்டிடங்கள்தான் எவ்வளவு கம்பீரமாகவும் பெருமிதத்துடனும் "எங்களுக்கு இணை யார்?" என்று கேட்பதுபோல் தலை நிமிர்ந்து நிற்கின்றன!

அன்னிய நாட்டிலிருந்து கிறிஸ்துவ சமயத் தொண்டு செய்வதற்கென்று வந்த பாதிரிமார்கள் எவ்வளவு பெரும் பிரயத்தனம் செய்து எத்தனை பணம் சேர்த்து இந்த நாட்டில் அம்மாதிரி காலேஜுகளை நிர்மாணித்து நடத்தி வருகிறார்கள்?

நமது நாட்டில் அத்தகைய பரோபகாரிகள் இல்லையா? தர்மசீலர்கள் இல்லையா? கல்வியின் சிறப்பையும் கல்விதானத்தின் பெருமையையும் உணர்ந்தவர்கள் இல்லையா?

இருக்கிறார்கள்! ஆனால் நம்மவர்களிடமுள்ள அந்த உயர்ந்த குணங்களை யெல்லாம் காரியத்திலே கொண்டுவந்து பயன்படுத்தும் திறமைதான் குறைவாயிருக்கிறது.

இந்தியா சுதந்திரம் அடையப் போகும் இந்த வருஷத்தில் மேற்படி குறைபாடும் நீங்கட்டும். திருச்சி நேஷனல் காலேஜின் அறுபது வருஷத்து வளர்ச்சி இந்த வருஷத்தில் பூரணமடையட்டும். அதற்கு வேண்டிய பத்து லட்சம் ரூபாயையும் தமிழ் மக்கள் மகிழ்ச்சியுடன் கொடுத்துப் பிற்கால சந்ததிகளின் வாழ்த்துக்கு உரியவர்களாகட்டும்.

கல்கி

மலர் 6 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 3

என்ன சேதி?

பலே பம்பாய்!

பம்பாய் முந்திக்கொண்டு விட்டது! நல்ல காரியத்தில், மிகவும் முக்கியமான காரியத்தில் முந்திக்கொண்டு விட்டது! ஆரம்பப் பள்ளிக்கூட ஆசிரியர்களுக்குக் குறைந்த பட்சமான ஆரம்பச் சம்பளம் மாதம் 30 ரூபாய் என்று பம்பாய்க் காங்கிரஸ் மந்திரிசபை ஏற்படுத்தி யிருக்கிறது. முப்பது ரூபாயில் ஆரம்பித்து 75 ரூபாய் வரையில் அதிகப்படுத்தவும் இடம் செய்திருக்கிறது. பம்பாய்ப் பிரதம மந்திரி ஸ்ரீ பி. ஜி. கேரை வாழ்த்துகிறோம்; மற்ற பம்பாய்க் காங்கிரஸ் மந்திரிகளையும் வாழ்த்துகிறோம். அட்வைசர் ஆட்சியில் சம்பளக் கிளர்ச்சியை ஆரம்பித்துக் காங்கிரஸ் ஆட்சியில் வெற்றி பெற்ற பம்பாய் ஆரம்பப் பாடசாலை உபாத்தியாயர்களை மும்முறை வாழ்த்துகிறோம்.

ஆனால் நமது அருமைச் சென்னை மாகாணத்தில், நமது அருமந்த காங்கிரஸ் மந்திரிகள் என்ன செய்தார்கள்?

ஆரம்பப் பாடசாலை உபாத்தியாயர்களுக்கு மாதம் இரண்டு ரூபாய் சம்பளத்தை உயர்த்தி அவமானப் படுத்தினார்கள்!

இரண்டு ரூபாய் சம்பள உயர்வு தங்களை அவமானப் படுத்துவதா யிருப்பதால் அதை வாங்கிக் கொள்ளவே கூடாது என்று சென்னை மாகாண ஆரம்ப ஆசிரியர்கள் அநேகர் கருதுவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

பழைய பல்லவி

"**ம**துவிலக்குச் செய்தால் புது வரி போட வேண்டும்" என்ற பழைய பல்லவியைக் கனம் கோடி ரெட்டி அவர்கள் தஞ்சாவூர் ஜில்லாவில் போய்ப் பாடி யிருக்கிறார்.

"அது பிசகு; மதுவிலக்குக்காகப் புதிய வரி போட வேண்டியதில்லை" என்ற அநுபல்லவியைத் தஞ்சாவூர் அறிவாளிகள் திரும்பப் பாடி யிருப்பார்கள் என்பதில் சந்தேக மில்லை.

மதுவிலக்குச் செய்வதென்றால் ஏதோ பொதுப் பணத்தைக் கோடிக் கணக்கில் அதற்காகச் செலவு செய்வது போல் சிலர் பிரசாரம் செய்கிறார்கள்.

இது பெரும் மோசடியான பிரசாரம்.

அறியாத ஏழை எளிய மக்களுக்குக் கள்ளைக் கொடுத்து மதியை மயக்கி அவர்களுடைய கூலிப் பணத்தைக் கொள்ளை யடித்து வரும் சர்க்கார் வருமானம் மதுவிலக்கினால் நின்று போகும். அவ்வளவுதான்.

இந்த வருமானம் முழுதும் நின்று போனாலும் சர்க்காருக்கு வேறு வழிகளில் வருமானம் ரூ. 35 கோடி வருகிறது. இது ஆறு வருஷத்துக்கு முந்திய மொத்த சர்க்கார் வருமானத்தைவிட இரண்டு மடங்கு. இதைத் தவிர, கையிருப்பில் ரூ. 31½ கோடி இருக்கிறது. இவ்வளவும் போதவில்லை யென்றால்,—நியாயமான பொது நன்மைக்கான காரியங்களுக்காக மேலும் பணம் வேண்டு மென்றால், — அதற்குப் புது வரி போடாமல் பணம் சேர்க்க வழிகள் இருக்கின்றன.

(1) பருத்தி ஆலைத் தொழில். (2) மோட்டார் பஸ் போக்கு வரவு. (3) இன்ஷ்யூரன்ஸ், (4) சினிமா ஆகிய இந்த நாலு தொழில்களை சர்க்கார் எடுத்துக் கொண்டு நடத்தினால், சென்னை சர்க்காரின் இந்த வருஷ வருமானமாகிய ரூ. 48 கோடி மேற்படி நாலு தொழில்களிலே மட்டும் கிடைக்கும்.

எந்தக் காரியத்துக்காகவும் புதிய வரி போட வேண்டிய அவசியமே இல்லை.

பேஷாகப் போகட்டும்!

இடைக்கால சர்க்காரை அமைக்கும் படியாகக் காங்கிரஸ் தலைவர் பண்டித

ஜவாஹர்லால் நேருவை லார்ட் வேவல் அழைத்திருப்பதைப் பார்த்து முஸ்லிம் லீக் தலைவர்கள் சிலருக்கு ஆத்திரம் பொத்துக் கொண்டு வருகிறது.


மேற்படி ஆத்திரத்தின் விளைவாக, ஆக்ரோஷமும் ஆவேசமும் கோப தாபமும் வீராவேசமும் நிறைந்த பல புரியாத அறிக்கைகளை அவர்கள் வெளியிட்டு வருகிறார்கள். அந்த மாதிரியாக அறிக்கை வெளியிட்டவர்களிலே வங்காளப் பிரதம மந்திரி ஜனாப் ஹுஸைன் சுஹ்ரவர்த்தியும் ஒருவர். ஜனாப் சுஹ்ரவர்த்தி தமது அறிக்கை ஒன்றில், வங்காளத்துக்குச் சுதந்திரம் வாங்கிக் கொடுப்பதற்கு ஒரு வழி சொல்லியிருக்கிறார். அதாவது, மத்திய சர்க்காரில் காங்கிரஸ் மாத்திரம் பதவிக்கு வருமானால், வங்காளம் தனியாகப் பிரிந்து போய்ச் சுதந்திர சர்க்காரை ஏற்படுத்திக் கொள்ளுமாம்.


நல்லது, ரொம்ப சந்தோஷம். ஜனாப் சுஹ்ரவர்த்தி அவ்விதம் வங்காளத்துக்குச் சுதந்திரம் வாங்கிக் கொடுக்க வேண்டும்; அதற்கு ஆண்டவன் அருள் புரிய வேண்டும் என்பதே நம்முடைய ஆவலுமாகும். முதன் முதலிலே சுதந்திரக் கிளர்ச்சியைப் பலமாக ஆரம்பித்து நடத்திய வங்காளம் முதன் முதலில் பூரண சுதந்திரத்தை ஸ்தாபித்துக் கொள்வதும் நியாயமே யல்லவா?


என்ன சமாதானம்?

ஜனாப் சுஹ்ரவர்த்தி தம்முடைய கோப தாபத்தையும் அர்த்தமற்ற ஆத்திரத்தையும் ஒருபுறம் நிறுத்திவிட்டுக் கொஞ்சம் நிதானமாக ஒரு விஷயத்தை யோசித்துப் பார்க்கட்டும்.

மத்திய சர்க்காரிலே காங்கிரஸ் தலைவர்கள் பதவிக்கு வருவதைப் பற்றி அவர் இவ்வளவு ஆத்திரப்படுகிறாரே, அவருடைய தலைமையின் கீழ் அமைந்திருக்கும் வங்க மந்திரி சபையைப் பற்றி அவர் என்ன சமாதானம் சொல்ல முடியும்? ஜனத் தொகையில் ஏறக்குறைய ஹிந்துக்களும் முஸ்லிம்களும் சரி சமமாயிருக்கக் கூடிய வங்க மாகாணத்திலே, ஜனாப் சுஹ்ரவர்த்தி காங்கிரஸை ஒதுக்கி வைத்துவிட்டு ஏகபோக அதிகாரம் செலுத்துவதற்கு இணையாகச் சரித்திரத்திலே எங்கேயாவது உவமை உண்டா? இது என்ன நியாயத்தில் சேர்ந்தது என்பதை ஜனாப் சுஹ்ரவர்த்தி விளக்குவாரா?


சர்க்கார் அமைக்கும்படி காங்கிரஸ் அக்கிராசனர் ஜவாஹர்லால்ஜியை அழைத்திருக்கிறார்.
இந்திய அரசியல் பிரச்னை
என்ன வெல்லாமோ செய்து பார்த்தும் இந்தப் பூட்டைத் திறக்க முடியவில்லை. உங்களுடைய சாவியைப் போட்டுத் தான் திறக்க வேண்டும் போலிருக்கிறது!


சென்றவாரம் ஐக்கிய மாகாணத்தில் நடந்த அசெம்ளிக் கூட்டத்தில் ஜமீன்தாரி முறையை ஒழிக்கும் மசோதா நிறை வேறியது.
ஜமீன்தாரி ஒழிப்பு மசோதா
ஜமீன்தார்


சமஸ்தான மன்னர்கள் தங்களுடைய 93 வோட்டுக்களைக் கொண்டு காங்கிரஸுடனும் லீகுடனும் பேரம் பேசுகிறார்கள். (அரசியல் நிர்ணய சபை சமஸ்தானங்களுக்கு 93 ஸ்தானங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன!)
அதிக சலுகை காட்டுகிறவர்களுக்கே என்னுடைய வோட்டுகள்!
93 வோட்டுகள்

சுதந்திர உதயம்

ஆயிரம் வருஷம் போலத் தோன்றிய நீடித்த இரவிலே, அகாதமான இருள் சூழ்ந்த முடிவில்லா இரவிலே, கிடந்து தவித்துக் கொண்டிருந்தோம். அந்தக கனாந்தகாரத்தின் தண்மதியின் வெண்ணிலவு இல்லை; நட்சத்திரங்களின் மினுமினுக்கும் ஒளி இல்லை; மின்சார தீபங்களும் மண்ணெண்ணெய் விளக்குகளும்கூட இல்லை. அவ்வப்போது சுடுகாட்டில் பிரேதங்களை எரிக்கும் நெருப்பின் பிரகாசம் ஒன்றுதான் தெரிந்தது.

நாலாபுறத்திலும் ஓநாய்களும், நரிகளும் ஊளையிட்டுக் கொண்டிருந்தன. யமதூதர்களைக் கண்டு நாய்கள் ஓலமிடும் சத்தமும், ஆந்தைகள் உறுமும் சத்தமும், பூனைகள் சண்டையிடும் ஓசையும், மனிதர்களின் அழுகைக் குரலும் கேட்டுக் கொண்டிருந்தன.

அவ்வளவு பயங்கரமான இரவு கழிந்துவிட்டது. அதோ கிழக்குத் திக்கில் அருணோதயம் ஆகிவிட்டது என்று பல தடவை தோன்றியது; அதெல்லாம் ஏமாற்றமாக முடிந்தது. அருணோதயம் என்று தோன்றிய வெளிச்சம் குடிசை வீடுகள் பற்றி எரியும் வெளிச்சந்தான் என்று தெரிந்தது.

இப்படிப் பல தடவை ஏமாற்றமடைந்த பிறகு உண்மையாகவே கிழக்கு வெளுத்துப் பல பல வென்று பொழுது புலருமானால், அந்தக் காட்சி எத்தனை மகிழ்ச்சிகரமாயிருக்கும்? ஆந்தைகளின் உறுமலும் நரிகளின் ஊளையும் மனிதர்களின் அழு குரலும் நின்று, நானாவிதமான பட்சி ஜாலங்களின் கலகலத் தொனியும் வேத கோஷமும் தேவாரப் பாடலும் பூபாள ராகமும் உழவர்கள் மாடுகளுடன் வயல்களுக்குப் புறப்படும் சத்தமும் கேட்டால், எவ்வளவு மனோகரமாயும் ஆனந்தமாயுமிருக்கும்?

இடைக்கால சுதந்திர சர்க்காரை அமைப்பதற்காகக் காங்கிரஸ் அக்கிராசனர் அழைக்கப்பட்டார் என்ற செய்தி நமக்கு அத்தகைய அருணோதயத்தைக் கண்டது போன்ற உவகையை அளித்தது. காரியக் கமிட்டியின் சம்மதத்தின் பேரில் ஜவாஹர்லால் ஜீ அந்த அழைப்பை ஏற்றுக் கொண்டார் என்னும் செய்தி அதைக் காட்டிலும் அதிக மகிழ்ச்சியைத் தந்தது.

பாரத மகாராஜன் ஒரு குடையின் கீழ் ஆண்ட இந்தப் பழைய பாரத நாட்டில் மறுபடியும் நமது நாளில் இமயம் முதல் குமரி வரையில் ஒரே சுதந்திர இராஜ்யம் ஏற்படப் போகிறது! அத்தகைய அகண்ட பாரத ராஜ்யத்தை இந்தியப் பொது மக்களின் உண்மையான பிரதிநிதிகள் — நமது அன்பையும் பக்தியையும் ஒருங்கே கவர்ந்த உத்தம தேசத் தலைவர்கள்—ஆட்சி புரியப் போகிறார்கள்!

இதைக் காட்டிலும் மகிழ்ச்சியும் குதூகலமும் அளிக்கக் கூடிய செய்தி வேறு என்ன இருக்கப் போகிறது?

* * *

இத்தகைய ஒப்பற்ற மகிழ்ச்சியையும் குதூகலத்தையும் நமக்கு அளித்ததற்காக முதலில் பிரிட்டிஷ் தொழிற் கட்சி மந்திரிமார்களையும், அவர்களின் இந்தியாவுக்குத் தூதுவந்த மந்திரிகள் மூவரையும், வைஸ்ராய் வேவலையும் வாழ்த்துகிறோம்.

அவர்கள் இந்திய அரசியல் பிரச்னையைத் தீர்ப்பதற்காக என்னவெல்லாமோ குறுக்கு வழிகளிலும் சந்து பொந்துகளிலும் புகுந்து நுழைந்து திண்டாடினார்கள். அந்த வழிகள் எல்லாம் பிரயோஜனமில்லை என்று கண்டு கடைசியாக இந்த இராஜ மார்க்கத்துக்கு வந்தார்கள்.

அநாவசியமான அலைச்சலுக்கும் தாமதத்துக்கும் பிறகு இந்த நல்வழிக்கு அவர்கள் வந்த போதிலும், இதன் மூலமாகத் தங்களுடைய நல்ல நோக்கத்தை எள்ளத்தனை சந்தேகத்துக்கும் இடமின்றி நிரூபித்து விட்டார்கள்.

அவர்களை மறுபடியும் மனமார வாழ்த்துகிறோம்.

* * *

அடுத்தபடியாக நமது ஒப்பற்ற காங்கிரஸ் தலைவர்கள் இப்போதெல்லாம் காட்டி வரும் இணையில்லா இராஜ தந்திரத்தை வாழ்த்த வேண்டும்.

வைஸ்ராய் வேவல் இத்தகைய நேர் வழியைக் கடைப் பிடிப்பதற்கு நாக புரியில் கூடிய காங்கிரஸ் காரியக் கமிட்டியின் தீர்மானம் வெகுவாக ஒத்தாசை செய்திருக்கிறது.

அந்தத் தீர்மானம் எந்தவிதமான சந்தேக விபரீத வியாக்யானங்களுக்கும் இடம் ஏற்படாதபடி தெள்ளத் தெளிந்த பாஷையில் விஷயத்தை மிகச் சுருக்கமாக எடுத்துக் கூறுகிறது.

பிரிட்டிஷ் மந்திரிகளின் நீண்டகால இந்திய அரசியல் திட்டத்தை பூரணமாய் ஒப்புக் கொள்வதாகவும், அதன் சிற்சில அம்சங்களைப் பற்றி வியாக்யானங்களில் அபிப்பிராய பேதம் ஏற்பட்டால், மேற்படி திட்டத்தில் கண்ட முறைப்படியே தீர்த்துக் கொள்வதாகவும் அந்தத் தீர்மானம் தெளிவாகச் சொல்லியிருக்கிறது.

இப்படிக் காரியக் கமிட்டி தீர்மானம் செய்ததுதான் ஜவாஹருக்கு வைஸ்ராய் அழைப்பு அனுப்புவதைச் சாத்தியமாக்கிற்று என்பதில் சந்தேகமில்லை.

* * *

சுதந்திரம் என்றால் ஏதோ தமாஷும் வேடிக்கையுமல்ல. இழந்த சுதந்திரத்தைத் திரும்பப் பெறுவது எவ்வளவு கஷ்டமான காரியமோ அதைக் காட்டிலும் பன்மடங்கு கஷ்டமானது அடைந்த சுதந்திரத்தை நிலை நாட்டிக் கொள்வது.

இந்தியாவின் சுதந்திர பாரத்தைத் தாங்கும் பொறுப்பு இப்போது காங்கிரஸுக்கு ஏற்பட்டிருக்கிறது.

அந்தப் பொறுப்பு மகத்தானது. அதை நிர்வகிப்பதில் எத்தனையோ அபாயங்களும் இடையூறுகளும் நேரக் கூடும்.

அவற்றையெல்லாம் சமாளித்தே தீர வேண்டும். சமாளிப்பதற்கு எத்தனையோ தீரமும் துணிச்சலும் வேண்டும். அதோடு தாராள மனப்பான்மையும் நியாய புத்தியும் வேண்டும்.

எல்லாவற்றிலும் முக்கியமான இடையூறு ஜனாப் ஜின்னாவின் மூலமாக ஏற்படக் கூடும். அதற்கு வேண்டிய சக்தி அவருக்கு இருக்கிறது.

காங்கிரஸ் தலைவர்கள் மிக்க தாராள புத்தியும் பெருந்தன்மையும் காட்டுவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

இடைக்கால சர்க்காரில் 14 ஸ்தானங்களில் 5 ஸ்தானங்கள் முஸ்லிம் லீக்குக்குக் கொடுக்க அவர்கள் தயாராயிருப்பார்கள்.

காங்கிரஸுக்குரிய ஆறு ஸ்தானங்களில் ஒன்றுக்குத் தேசிய முஸ்லிம் ஒருவரை நியமிப்பார்கள் என்றும் நாம் எதிர்பார்க்கலாம்.

இப்படிச் செய்தால், அகில இந்தியாவின் புதிய சுதந்திர நிர்வாக சபையில் ஆறு முஸ்லிம்களும் நாலு 'சாதி—ஹிந்து'க்களும் இருப்பார்கள்!

அதாவது 26 கோடி 'சாதி—ஹிந்து'க்களைக் காட்டிலும் 8 கோடி முஸ்லிம்கள் ஒன்றரை மடங்கு பிரதிநிதித்துவம் பெறுவார்கள்!

இதை ஹிந்துமகா சபைக்காரர்கள் பெரிதும் ஆட்சேபிப்பார்கள் என்று எதிர்பார்க்க வேண்டியதுதான்.

ஆனால் ஜனாப் ஜின்னா ஆட்சேபிக்கப் போகிறாரா என்று பார்க்க வேண்டும்.

ஆட்சேபித்தால் அவருக்கு வெறும் வீம்புதான் பிரதானமே தவிர, முஸ்லிம்களின் நன்மையோ இந்தியாவின் சுதந்திரமோ முக்கியமல்லவென்று மிகத் தெளிவாக ஏற்பட்டுவிடும். முஸ்லிம் சமூகமே அதை உணர்ந்து கொள்ளும்.

இந்த மிக முக்கியமான சந்தர்ப்பத்தில் ஜனாப் ஜின்னா தீர்க்க திருஷ்டியுடனும் விசால நோக்கத்துடனும் நடந்து கொள்ள வேண்டும் என்று எல்லா முஸ்லிம்களும் அல்லாஹுத் ஆலாவைப் பிரார்த்திக்க வேண்டும்.

முஸ்லிம்கள் மட்டும் அல்ல; நாற்பது கோடி இந்திய மக்களும் சேர்ந்து பிரார்த்திக்க வேண்டியதுதான்.

அஸ்திவாரம் அசைகிறது!

"நான்கெஜடட் அப்பீஸியல்களின் கஷ்டங்கள்" என்று தமிழில் எழுதும் போது பேனா முனை உடைகிறது; படிக்கும் போது பல் உடைகிறது. அவர்களுடைய பட்டங்களைக் காட்டிலும் நம்முடைய கஷ்டம் அதிகமாகி விடுகிறது.

உத்தியோக வர்க்கத்தில் மேல்தரத்தில் உள்ளவர்கள் — அதாவது சுமார் ரூ 200க்கு மேல் சம்பளம் வாங்குகிறவர்களை — 'கெஜடட் ஆபீஸர்' என்று சொல்வது வழக்கம். ஏனென்றால் அவர்கள் எங்கேயாவது போனாலும் வந்தாலும் மாற்றுதல் ஆனாலும் அவர்கள் வீட்டில் கல்யாணம் கார்த்திகை சடங்கு சிராத்தம் நடந்தாலும் சர்க்கார் கெஜட்டில் பிரசுரிப்பார்கள். அவர்களுக்கு வருஷா வருஷம் மலைவாசம் போகப் பணம் கொடுப்பார்கள்.

அப்படி மலைக்குப் போகவும் கெஜட்டில் போடவும் லாயக்கில்லாத குமாஸ்தா வர்க்கத்தார் 'நான்கெஜடட் ஆபீஸர்கள்' என்று சொல்லப்படுகிறார்கள்.

சாதாரணமாய்த் தமிழ்ப் பேச்சு வழக்கில் சொன்னால், கெஜடட் ஆபீஸர்களை 'மேல்தர உத்தியோகஸ்தர்கள்' என்றும், மற்றவர்களைக் 'கீழ்த்தர உத்தியோகஸ்தர்கள்' என்றும் சொல்லவேண்டும். அப்படிக் 'கீழ்த்தர உத்தியோகஸ்தர்கள்' என்று சொல்லுவது கொஞ்சமும் உண்மைக்குப் பொருத்தமில்லாததாயும், அனர்த்தம் கொடுக்கக் கூடியதாயும், கேவலப்படுத்துவதாயுமிருப்பதால் வேறு தமிழ் வார்த்தை ஒன்றைக் கண்டுபிடிக்க விரும்பினோம். கடைசியாகக் கண்டுபிடித்து விட்டோம்!

நான்கெஜடட் ஆபீஸர்களை 'அஸ்திவார உத்தியோகஸ்தர்கள்' என்று குறிப்பிடத் தீர்மானித்திருக்கிறோம்.

இவ்வளவு கஷ்டப்பட்டு 'அஸ்திவார உத்தியோகஸ்தர்கள்' என்ற சொற்றொடரைக் கண்டுபிடித்த பிறகு, அவர்களுடைய கஷ்டங்களைப் பற்றி எழுதலாம் என்று உத்தேசித்தால், அதற்கு ஒரு தடை குறுக்கிடுகிறது. எதற்காக எழுதவேண்டும் என்ற எண்ணம் தோன்றுகிறது. ஏன் என்றால்:—

அஸ்திவார உத்தியோகஸ்தர்கள் தங்களுடைய சக்தியை உணர்ந்தார்களானால், அவர்களுக்கு வேறு யாருடைய உதவியும் தேவை யில்லை.

அஸ்திவார உத்தியோகஸ்தர்கள் தங்களுடைய சக்தியை உணரவில்லையென்றால், அவர்களுக்கு வேறு யாருடைய உதவியும் பிரயோஜனப்படப் போவதில்லை.

மேலே குறிப்பிட்ட விஷயத்தை இன்னும் சிறிது விளக்கிச் சொல்கிறோம்.

தெற்கு வடக்கில் இரண்டாயிரம் மைலும் கிழக்கு மேற்கில் ஆயிரத்தைந்நூறு மைலும் உள்ள இந்தப் பரந்த பாரத தேசத்தை — நாற்பது கோடி மக்கள் வாழும் மகத்தான தேசத்தை — சென்ற 150 வருஷத்துக்கு மேலாக பிரிட்டிஷார் ஆட்சி புரிந்து வருகிறார்கள். இந்த தேசத்தில் எத்தனை இங்கிலீஷ்காரர்கள் இருந்து அந்த மகத்தான இராஜ்யப் பொறுப்பை நடத்தி வருகிறார்கள் என்று பார்த்தால்:—

மொத்தம் ஒரு லட்சம் ஆங்கிலேயருக்கு மேல் இந்நாட்டில் எப்போதும் இருந்திருக்க முடியாது.

இவர்களிலும் இராஜ்ய நிர்வாகக் காரியங்களில் ஈடுபட்டவர்கள் சுமார் பத்தாயிரம் பேருக்குமேல் இருக்க முடியாது.

தற்சமயம் எல்லா சர்க்கார் இலாகாக்களிலும் சேர்ந்து இரண்டாயிரம் பிரிட்டிஷார் இருந்தால் பெரிய காரியம்.

எனினும் மேற்படி இரண்டாயிரம் பேர் நாற்பது கோடி ஜனங்களின் ஆட்சியைத் தங்குதடையில்லாமல் நடத்திக் கொண்டு போவது எப்படிச் சாத்தியமாகிறது?

ஒரு பைசா பாக்கி யில்லாமல் 40 கோடி மக்களிடம் வரி வசூலிப்பது எப்படிச் சாத்தியமாகிறது?

சொல்கிறோம்; திடுக்கிட்டு மூர்ச்சையடைந்து விழாமல் கேளுங்கள்.

அதெல்லாம், முப்பது ரூபாய் + மூன்று ரூபாய் வீதம் மாதச் சம்பளம் வாங்கும் சர்க்கார் காரியாலய குமாஸ்தாக்கள் செய்யும் வேலையினால்தான். அவர்கள் இரவு பகல் உழைத்துப் பிராணனைக் கொடுத்து உலகத்திலேயே ஒரு பெரும் அதிசயமாக விளங்கும் பிரிட்டிஷ் ஆட்சியை இந்தியாவிலே நடத்தி வருகிறார்கள்.

இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியாகிய மாடமாளிகை கூட கோபுரமுள்ள கட்டிடத்தைத் தாங்கும் அஸ்திவாரம் நமது முப்பது ரூபாய்க் குமாஸ்தாக்களும் டைப்பிஸ்டுகளுந்தான். அந்த அஸ்திவாரமானது சிறிது அசைந்தால், மேலேயுள்ள சாம்ராஜ்ய மாளிகை உடனே ஆட்டங் கொடுத்துவிடும். அஸ்திவாரம் இடம்பெயர்ந்தாலோ மாளிகை

அட்டைகளினுலான வீட்டைப்போல் பொல பொலவென்று உதிர்ந்து விடும்.

* * *

பிரிட்டிஷ் ஆட்சிக்குச் சொன்னது காங்கிரஸ் ஆட்சிக்கும் பொருந்தும்.

அரசாங்க நிர்வாகத்துக்கே அடிப்படையாக இருக்கும் அஸ்திவார உத்தியோகஸ்தர்களின் அதிருப்தியை வளர விட்டு அவர்களை வேலை நிறுத்தம் முதலிய காரியங்களில் இறங்கச் செய்தால், சர்க்கார் நிர்வாகம் சின்னபின்னமாகிச் சிதறிப் போகும்.

அந்த அஸ்திவாரம் இப்போது அசைந்து கொண்டிருப்பதைத்தான் நம் கண் முன்னால் காண்கிறோம்.

ஒரு நாளும் இல்லாத திருநாளாக, அஸ்திவார சர்க்கார் உத்தியோகஸ்தர்கள சம்பள உயர்வு கோரி விளம்பர அட்டைகளைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு தெருவீதிகளில் ஊர்வலம் போகிறார்கள்!

கடற்கரையில் பத்தாயிரம் பேர் கூட்டம் கூடிக் காரசாரமான பிரசங்கங்களைச் செய்கிறார்கள்!

"அந்த வேலை ;
குறைந்த சம்பளம் ;
கவனிப்பாரில்லை ;
பட்டினி கிடக்கிறோம் ;
சர்க்கார் உத்தியோகஸ்தர்கள்"

என்று எழுதிய பாட்ஜுகளைச் சட்டை
தைத்துக் கொள்கிறார்கள்.

ஆகஸ்டு 25உ பெரிய மாகாண ம
காடு கூடித் 'தீவிர நடவடிக்கை' எடுப்ப
பற்றியும் பேசுகிறார்கள்.

அரசாங்க நிர்வாகத்தின் அஸ்திவா
உண்மையில் அசையத்தான் அசைகிறது!

* * *

பிரிட்டிஷ் அரசாங்கம் நடந்த வரை
சும்மா இருந்து விட்டு இப்போது காங்கி
ஆட்சி ஏற்பட்டவுடனே இப்படி யெல்ல
கிளர்ச்சி செய்கிறார்களே என்று காங்கி
மந்திரிகள் வருத்தப்படலாம்.

"எல்லாம் அந்தப் பொல்லாத க
னிஸ்டுகளின் தூண்டுதல்" என்று பிர
மந்திரி பிரகாசம்காரு சொல்லலாம்.

அப்படிச் சொல்வது பெருந் தவறாகும்.


சமீபத்திலே தபால்காரர் வேலை நிறுத்
நடந்ததே அது சென்னை மந்திரிகளுக்கு
தொந்தரவு கொடுப்பதற்காகவா நடந்த

அப்படி யென்றால், அந்த வேலை நி
த்தின்போது சென்னை சர்க்கார் தபா
காரர்களை ஏன் ஆதரித்து நின்றார்கள்?

தபால்காரருக்குப் பதில் வேறு ஏ
சென்னை சர்க்கார் ஒப்புக்கொள்ளவும் ம

ஆகஸ்டு 8உ வியாழக்கிழமை சென்னை நகரம் ஒரு பெரும் அதிசயத்தைக் கண்ட
எல்லா கவர்ன்மெண்டு ஆபீஸ்களையும் சேர்ந்த சர்க்கார் அஸ்திவார உத்தியோகஸ்தர்கள்
குமாஸ்தாக்கள் டைப்பிஸ்டுகள் முதலியோர் — சம்பள உயர்வு கோரிய பெரும் விளம்
அட்டைகளைப் பிடித்துக்கொண்டு ஊர்வலம் கிளம்பினார்கள். பிரதம மந்திரி பிரகாசமக
வீற்றிருக்கும் தலைமைக் காரியாலயத்தி லிருந்தும் ஊர்வலம் கிளம்பியது!





பல சர்க்கார் காரியாலயங்களிலிருந்தும் புறப்பட்ட உத்தியோகஸ்தர் ஊர்வலங்கள் ஒன்று
ர்ந்து மிகப் பெரிய ஊர்வலமாகி மவுண்ட் ரோட்டில் சென்ற காட்சியைப் பார்த்து மேற்படி
லையைக் காவல் புரியும் மன்றோ துரையின் சிலைகூடத் திடுக்கிட்டுப் போயிருக்கும்!

பாதிக்கக் கூடாது என்று என் பிரதம
திரி பிரகாசம் உத்தரவு போட்டார்?

உண்மை என்னவென்றால், தேசமெங்
ம் தற்சமயம் தொழிலாளிகளும் சொற்ப
பள உத்தியோகஸ்தர்களும் அதிக சம்
ம் கோரிக் கிளர்ச்சி செய்வதற்கு நியாய
ன காரணங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

இந்த வருஷத்தைப்போல் முன் எப்போ
ம் உணவுப் பஞ்சமும் துணிப் பஞ்சமும்
வ்வளவு கடுமையாக இருந்ததில்லை.

இந்த வருஷத்தைப் போல் முன் எப்
போதும் வாழ்க்கைக்கு அவசியமான
ல்லாப் பொருள்களும் இவ்வளவு அதிக
லைக்கு விற்றதில்லை.

முன் எப்போதும் வீட்டு வாடகை இவ்
ளவு அதிகமாயிருந்ததில்லை.

அஸ்திவார உத்தியோகஸ்தர் சங்கத்தார்
சென்னையில் உயிரை வைத்துக் கொண்டு
வர் தள்ளுவதற்கு இன்றியமையாத
செலவுகளைக் குறிப்பிட்டு ஒரு ஜாபிதா
யாரித்திருக்கிறார்கள்.

மிகக் குறைந்த சிக்கனமான செலவுத்
ட்டத்தின்படி போட்டிருக்கும் அந்த
ஜாபிதாவிலிருந்து மாதம் ரூ. 116-8-6
ல்லாமல் ஒரு சின்னஞ் சிறு குடும்பம்
சென்னையில் வாழ்க்கை நடத்த முடியா
தென்று திட்டமாக நிரூபிக்கப்படுகிறது.

இந்த நிலைமையில் அஸ்திவார உத்தியோகஸ்தர்களின் சம்பள உயர்வுக் கோரிக்கை மிக மிக நியாயமாகும்.

"காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்தது போல்" நமது காங்கிரஸ் மந்திரி சபை வந்த சமயத்தில் மாதச் சம்பளக்காரர்களின் கஷ்டங்களும் உச்ச நிலைக்கு வந்திருக்கின்றன.

"நமது சர்க்கார்" என்ற காரணத்தினால் எல்லாரும் உரிமை பாராட்டிக் கஷ்டத்தைப் போக்கும்படி கோருகிறார்கள்.

அதிலும் புதிய காங்கிரஸ் மந்திரிகள் வந்தவுடனே முதல் காரியமாகத் தங்களுடைய சம்பளத்தை இரண்டு பங்கு செய்து கொண்டபடியால் எல்லாருக்கும் அது ஒரு முன்மாதிரியாகப் போய்விட்டது!

உரிமையோடு கேட்கவும், வற்புறுத்திக் கேட்கவும் இடம் ஏற்பட்டு விட்டது.

சர்க்கார் அஸ்திவார உத்தியோகஸ்தர்களின் சம்பள உயர்வுக் கோரிக்கைகளை ஆதரிப்பதற்காக நாம் இதை எழுதவில்லை. ஏனெனில் நம்முடைய ஆதரவு அவர்களுக்குக் கொஞ்சமும் தேவையில்லை.

காங்கிரஸ் மந்திரிகளை எச்சரிப்பதற்காகவே இதை எழுதுகிறோம். "அரசாங்க நிர்வாகத்தின் அஸ்திவாரமே அசைந்து கொடுத்து வருகிறது! ஜாக்கிரதை!" என்று எச்சரிக்கை செய்கிறோம்.

ஆடல் பாடல்

கர்நாடகம்

சென்ற 7—8—46 புதன்கிழமை யன்று நான் ஒரு ஆகாச விபத்துக்கு உள்ளானேன். காயக சிகாமணி சங்கீத கலாநிதி அரியக்குடி இராமானுஜய்யங்கார் என்னை மேற்படி ஆபத்துக்கு உள்ளாக்கினர். நன்று அவருடைய கச்சேரியைக் கேட்டுக் கொண்டிருந்தபோது, வெகு நேரம் நாத ஆகாச வெளியில் மிதந்து கொண்டிருந்தேன். ராகம் பல்லவிகூடப் பாடாமல் கச்சேரியை மணி ஒன்பதுக்குப் பட் என்று திருத்தி மங்களம் பாடவே, நானும் ஆகாச வெளியிலிருந்து 'தட்' என்று பூமிக்கு வந்து சேர்ந்தேன். அப்பப்பா! இந்தச் சங்கீத கலாநிதி மிகப் பொல்லாத மனிதர் என்று நிர்மானித்துக் கொண்டேன்.

ஆம்; அரியக்குடி வெகு பொல்லாதவர் என்பதில் சந்தேகமில்லை. அவர் கச்சேரி செய்ய ஆரம்பித்த இருபத்தைந்தாம் ஆண்டு பூர்த்தி விழா சுமார் பத்து வருஷத்துக்கு முன்னுல் நடந்ததாக ஞாபகம் இருக்கிறது. ஆகவே, இப்போது வருஷம் 35 ஆகிறது! இத்தனை வருஷம் ஆனபிறகும் அவருடைய சாரீரத்தின் ஜீவசக்தியிலோ சங்கீதத்தின் உயர்விலோ விறுவிறுப்பிலோ அணுவளவாவது தளர்ச்சி ஏற்பட்டிருக்க வேண்டுமே? கிடையாது.

பழகப் பழகப் பாலும் புளிக்கும் என்பார்கள். அய்யங்கார் சங்கீதத்தைப் பாலுக்கு ஒப்பிட முடியாது. எவ்வளவுதான் பழகினுலும் எவ்வளவு தடவை கேட்டாலும் அவருடைய பாட்டு புளித்துப் போவதில்லை. எனவே பழகப் பழகப் பிரமை அதிகமாகும் ஒன்றும் கம்பர் காப்பிக்குத்தான் அய்யங்காரின் சங்கீதத்தை ஒப்பிட வேண்டும்!

4-8-46 கல்கியில் அறிவிக்கப்பட்டிருந்தபடி பிரம்ம ஸ்ரீ ருலமங்கலம் வைத்தியநாத பாகவதரின் ஞாபகார்த்தமாக மேற்படி உதவிக் கச்சேரி சென்ற புதன்கிழமை நடைபெற்றது. காலஞ்சென்ற அந்தப் பரம பாகவத சிரோமணி கா... வித்தையிலும் காலட்சேபக் கலையிலும் எ... வளவு பெருமை வாய்ந்தவராய் விள... கினுரோ, அதற்கேற்றபடி அரியக்குடியின் கச்சேரியும் அன்று அமைந்தது.

"எந்தரோ மகானுபாவுலு" என்று ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள் பாடியபோது பின்னுல் தமது பக்த பரம்பரையில் வரப் போகும் ருலமங்கலம் பாகவதர் போன்றவ... களையும் உட்படுத்தித்தான் சுவாமிகள் பாடி... யிருக்க வேண்டும். எனவே, அய்யங்கா... அந்தக் கீர்த்தனத்தைக் கச்சேரியின் ஆர... பத்தில் பாடியது மிகவும் பொருத்தமா... யிருந்தது. அதை அவர் பாடும்போது கீ... ஸ்தாயியில் அய்யங்காரின் சாரீரம் எவ்வள... சுருதி சுத்தமாகப் பேசுகிறது என்பதை... கேட்டு அதிசயிக்க வேண்டியதாயிருந்தது...

வேறு சில வித்வான்கள் கீழ் ஸ்தாயியில் பாடத் தொடங்கினுல், "ஐயோ! பாவம்... எத்தனை நேரம் தொண்டையைக் கனை... துக்கொண்டிருப்பார்?" என்று தோன்றும். அய்யங்காரோ கீழ் ஸ்தாயியிலே கூட... ஸ்வர சுத்தமாகவும் சுருதி சுத்தமாகவும் பா... கிறார். அதிலும் மேற்படி பஞ்சரத்தினக் கீர்... தனத்தைப் பாடும்போது, நாத மகா சமு... திரத்தில் இன்னிசைக் கப்பலானது தண்ணீ... ரைக் கிழித்துக் கொண்டு கம்பீரமாக... செல்வதுபோலத் தோற்றம் உண்டாகிறது...


அரியக்குடி ராமானுஜ அய்யங்கார்

பிற்பாடு காம்போதி ராக... ஆலாபனத்தில் மேல் ஸ்தா... யில் நின்று அய்யங்கார் வட்ட... மிட்டுச் சஞ்சாரம் செய்த... சமயத்திலோ, ஆகாச விமா... னம் மேலே மேலே மேலே... கிளம்பி மேக மண்டலத்துக்... கும் மேலே சென்று பிறகு... பிரயாணம் செய்வதே தெரி... யாதபடி மணிக்கு 300 மைல்... வேகத்தில் யாத்திரை செய்... வதுபோல் தோன்றியது.

பல தெலுங்கு, சம்ஸ்... கிருதக் கீர்த்தனங்களுடன்... தமிழ்க் கிருதிகளும் அன்று...

அய்யங்கார் ஏராளமாய்ப் பாடினார். ஆண்டாள் பாசுரங்களைக் குந்தலவராளியிலும் காம்போதியிலும் அழகிய விருத்திகளாக அமைத்துப் பாடியது அபாரமாயிருந்தது. கீர்த்தனங்களைக் கச்சேரிக்குத் தகுதியான பாணியில் 'பங்கீடு' செய்வதிலும், புதிய பாட்டுக்களுக்குப் பொருத்தமான கீர்த்தன மெட்டுக்களைப் போடுவதிலும் அய்யங்காருக்கு நிகர் அய்யங்கார்தான் என்று சொல்லவேண்டும். அய்யங்கார் அன்று பாடிய புதிய இராம நாடகக் கீர்த்தனைகள் இரண்டும் அப்படியே அரியக்குடி முத்திரையுடன் சோபை பெற்று விளங்கின.

அய்யங்கார் இன்னும் நெடுங்காலம் இப்படியே கர்நாடக சங்கீத உலகத்திற்குத் தலைமை வகித்துத் தமது பேரின்ப கானத்தினால் ரஸிகர்களை மகிழ்வித்து வருவார் என்று நம்புகிறேன். "நம்புகிறேன்" என்று சம்பிரதாயமாகச் சொல்லாமல் உண்மையான நம்பிக்கையுடனே நம்பிச் சொல்கிறேன்.

* * *

ஸ்ரீ வைத்தியநாத பாகவதரின் ஞாபகார்த்தமாகச் சென்ற (9-8-46) வெள்ளிக்கிழமையன்று மற்றொரு அபூர்வமான கச்சேரி நடந்தது. கச்சேரி செய்தவர் சங்கீத கலாநிதி பல்லடம் சஞ்சீவி ராயர் அவர்கள். சஞ்சீவி ராயர் என்பதைத் தவறாகச் சிரஞ்சீவி ராயர் என்று எழுதி விட்டதாய் கேட்பவர்கள் நினைக்கலாம். தவறானாலும் அது முழுதும் தவறாகப் போய் விடாது. இரண்டும் அவருக்குப் பொருத்தமான காரணப் பெயர்களாகும். அவருடைய வேணுகானம் பட்டமரத்தைத் தளிர்க்கச் செய்து, செத்த உயிரைப் பிழைப்பிக்கும் சக்தி வாய்ந்த அமுத கானமாதலால் அவர் சஞ்சீவி ராயர் என்பதில் ஐயமில்லை. அதே மாதிரி, பழைய கால சங்கீத கோஷ்டியைச் சேர்ந்த அந்த மகா வித்வான் நெடுங்காலமாக, வெகு நெடுங் காலமாகக் கச்சேரி செய்து வந்தபோதிலும் அன்று போலவே இன்று அவருடைய வேணு கானம் நவ யௌவன சோபையுடன் விளங்குவதால் சிரஞ்சீவி ராயர் என்று சொன்னாலும் நிச்சயம் பொருந்தும். சரப சாஸ்திரிகள் தமது அருமைச் சிஷ்யருக்கு அபூர்வமான நாதவித்தையை அளித்ததோடு, நாகப் பாம்பின் தலையில் உள்ளதாகச் சொல்லப்படும் நீல ரத்தினத்தையும் கொடுத்து விட்டுப் போனார் என்று தோன்றுகிறது.



பல்லடம் சஞ்சீவி ராயர்

கச்சேரியின் ஆரம்பத்தில் "ஸ்ரீ ரகுவர சுகுணாலயா" கீர்த்தனத்துக்குப் பூர்வாங்கமாகப் பைரவி ராகத்தை எடுத்து, ஸப்த ஸ்வரங்களைக் கொண்டு ஒரு ரத்தின ஹாரத்தை அவர் தொடுத்துக் காட்டிய போது, சபை முழுவதிலும் ஹாஹாகாரம் உண்டாயிற்று. பின்னர் கீர்த்தனத்தை வாசித்து, ஸ்வரப்பிரஸ்தாரம் ஆரம்பித்ததும் ஆஹா !— ஒளி வீசும் வைரங்களும் மின்னுகின்ற இரத்தினங்களும் மரகதங்களும் கோமேதகங்களும் மாணிக்கங்களும் முத்துக்களும் கலகலவென்று பொழியத் தொடங்கின. அப்புறம் இரண்டு மணி நேரம் இடைவிடாமலும், பக்க வாத்தியங்களுக்குக் கூட அதிகமாய் இடங் கொடாமலும், சபையோருக்கு மூச்சுவிட அவகாசம் தராமலும் ராகத்துக்குமேல் ராகமும் கீர்த்தனத்துக்கு மேல் கீர்த்தனமும் ஸ்வரத்துக்கு மேல் ஸ்வரமுமாக கானவர்ஷம் சோனமாரியாகச் சொரிந்து கொண்டிருந்தது.

நன்றாக வேணுகானம் செய்கிறவர்களைக் குறித்துச் சில சமயம் "ஸாக்ஷாத் கிருஷ்ணனே அவதாரம் செய்து வந்து விட்டார்!" என்று அதிசயோக்தியாகச் சொல்வதுண்டு. நான் அப்படிச் சொல்ல இஷ்டப்படவில்லை. எனக்குத் தோன்றுவது இதுதான்:— ஸ்ரீ கிருஷ்ணபகவான் குசேலரோடு குருகுல வாசம் செய்து எழுதப் படிக்கக் கற்றுக் கொண்ட பிற்பாடு, வேணுகானம் பயில்வதற்காகக் கும்பகோணம் சரபசாஸ்திரிகளைத் தேடிக்கொண்டு வந்திருக்க வேண்டும்; சஞ்சீவிராயரும் கிருஷ்ணராயரு

மாகச் சேர்ந்து சரப சாஸ்திரிகளிடம் வேறு வான வித்தையைப் பயின்றிருக்க வேண்டும்! ஸ்ரீ கிருஷ்ண ராயர் அவர்களுக்குச் சரப சாஸ்திரிகளிடம் தாம் *கற்ற வித்தையைக் காண்பிக்க மாடுகள், மான்கள், பட்சிகள், ஆயர்ச் சிறுவர் சிறுமியர் முதலியோர் அடங்கிய சபைதான் கிடைத்தது! ஸ்ரீ சஞ்சீவி ராயருக்கோ சங்கீதத்தின் சகல நுட்பங்களையும் அறிந்து அநுபவிக்கக் கூடிய மகா ரஸிகர்கள் அடங்கிய சபைகள் இந்தக் காலத்தில் கிடைத்து வருகின்றன. எனவே, இருவரிலும் ஸ்ரீ சஞ்சீவிராயர்தான் அதிர்ஷ்டசாலி என்பதில் சந்தேகமில்லை.

• • •

சூலமங்கலம் வைத்தியநாத பாகவதரின் ஞாபகார்த்தமாக நாத சங்கீத மணி மண்டபம் ஒன்றை அமைக்க வேண்டுமென்று அவருடைய குமாரர்கள் பெரு முயற்சி செய்து வருகிறார்கள். அதற்குச் சங்கீத வித்வான்களும் மனமுவந்து பூரண உதவி செய்து வருகிறார்கள். உதாரணமாக, அரியக்குடி ராமானுஜய்யங்கார் மேற்படி கைங்கரியத்துக்காக உதவிய கச்சேரி இது மூன்றாவது என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்! அப்படிப் பெரிய வித்வான்களுடைய ஒத்துழைப்பு இருந்தும் இதுவரையில் மண்டபம் கட்டுவதற்கு வேண்டிய வசதி ஏற்படவில்லை. நாத சங்கீதத்தைக் கொண்டே சுவர்கள் எழுப்பி மண்டபம் கட்டிவிட முடியாதல்லவா? அதற்குப் பணம் அல்லவா வேண்டியிருக்கிறது? தகுந்த அவகாசம் கொடுத்துப் போதிய விளம்பரம் செய்யாதபடியால் இதுவரையில் தகுந்தபடி பண வசூல் ஆகவில்லை. ஆனால் பாகவதரின் புதல்வர்களும் வித்வான்களும் அதற்காக முயற்சியை விட்டுவிடப் போவதுமில்லை. மேலும் பல உதவிநிதிக் கச்சேரிகள் ஏற்படுத்தப் போகிறார்கள். அந்தக் கச்சேரிகளுக்குப் பெருந் திரளாக வந்திருந்து உதவி வைத்து மண்டபத்தையும் கட்டித் தரவேண்டும் என்று ரஸிக மகாஜனங்களைக் கேட்டுக் கொள்கிறார்கள். அந்தக் கோரிக்கையில் நானும் சேர்ந்து கொள்கிறேன்.

○ ✶ ○

கலைமகள் கண்ணீர்

எத்தனையோ சங்கீத வித்வான்களைச் சம்பிரதாயமாக 'மகா வித்வான்' என்று சொல்கிறோம். என்றாலும் தமது பெயருடனேயே 'மகா' என்ற பட்டம் பொருந்தி வாழ்ந்த மகா வித்வான் கர்நாடக சங்கீத உலகில் ஒருவர்தான் உண்டு. அவர்தான் மகா வைத்தியநாதய்யர்.

சங்கீத உலகத்தில் வித்வான்களுடைய பெயர்களுக்கு முன்னால் ஊரின் பெயரைச் சேர்ப்பது வழக்கமாயிருந்து வருகிறது. அப்படி எத்தனையோ ஊர்கள் சங்கீதப் பிரபலம் அடைந்திருந்த போதிலும் ஊர்ப் பெயரிலேயே 'மகா' என்று அமைந்திருப்பது ஒரே ஒரு ஊர்தான். அதுதான் மகாராஜபுரம்.

அப்பேர்ப்பட்ட மகா வைத்தியநாதய்யரின் சிஷ்யரையும், மகாராஜபுரம் விசுவநாதய்யரின் குருவாயும் விளங்கிய உமையாள்புரம் சாமிநாதய்யர் இம் மாதம் 8-உ காலமானார் என்ற செய்தியைக் கேட்டுக் கலைமகள் கண்ணீர் வடித்திருப்பாள் என்பதில் ஐயமில்லை. கர்நாடக சங்கீத மாளிகையைத் தாங்கிக்கொண்டிருந்த சிற்ப வேலைப்பாடுள்ள தூணாக ஸ்ரீ சாமிநாதய்யர் விளங்கினார். தமது குருவிடம் பயின்ற கர்நாடக சம்பிரதாய 'பாணி'யிலிருந்து ஓர் அணுவளவும் வழுவக் கூடாதென்ற உறுதியுடன் அவர் சங்கீத வித்தையைப் பாதுகாத்து வந்தார். சங்கீத வித்வான்களுக்குள்ளே அபிப்பிராய பேதம் அல்லது விவாதம் ஏற்படும்போது 'உமையாள்புரம் பாடம் இது' என்று சொன்னால், அதுவே பிரிவி கௌன்ஸில் அப்பீல் முடிவைப் போல் எல்லா விவாதங்களையும் முடிக்கப் போதுமாயிருந்தது.

அத்தகைய மகா வித்வான் சாமிநாதய்யர் நம்மை விட்டு மறைந்து விட்டார். அவருடைய ஆத்மா ஜனன மரண அதீதமான நாதப் பிரம்மத்திலே கலந்து என்றென்றைக்கும் நித்திய ஆனந்தத்தில் மூழ்கித் திளைக்குமாக.

யுத்தம் ஆரம்பமானவுடன், தேசாபிமானமுள்ள ஆண் பெண்களைப்போல் டீயும் போருக்கு ஆயத்தமானது.



எல்லா முனைகளிலும் டீ போர்புரிந்தது. தரை, கடல், ஆகாயப்படைகள் எங்கு சென்றாலும் அவைகளோடு சென்றது. காயமடைந்தோரை காப்பாற்றுவதிலும், வியாதியுள்ளவர்களை சம்ரக்ஷிப்பதிலும், ஊக்கமிழந்தவர்களை உற்சாகப்படுத்துவதிலும் டீ தன் வேலையைச்செய்தது. பாலைவனங்களிலும் காடுகளிலும், பனியுறைந்த வடதுருவத்திலும், கடும் உஷ்ணப்பிரதேசங்களிலும், போர் புரியும் வீரர்களுக்கு டீ உற்சாகமளிக்கும் தன் சேவையைப் புரிந்தது.



ஐரோப்பிய விஜயத்தைக் கொண்டாடும்போதும் "உற்சாகமளிக்கும் கப்" முன்னணியில் நின்றது. உலக மகாயுத்தம் ஒழிந்ததைக் குறித்து மற்றுமொரு முறை வெற்றிநாளைக் கொண்டாடும் தினம் விரைவிலேயே வந்தது. அன்றைய மகிழ்ச்சியை மிகைப்படுத்த டீ தயாராக நின்றது.





போர்க்கோலத்தை டீ இன்னமும் தரித்திருந்தாலும், சமாதான காலத்தின் சாதாரண வாழ்க்கைக்குத் திரும்பும் பணியிலும் பங்கெடுத்து வருகிறது. இல்லற வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருளாகத்திகழும் அந்நன்னாளை எதிர்நோக்கி நிற்கிறது டீ. டீயை அனுபவித்து அருந்தும் அந்நாளை அடைய நீங்களும் ஆவனதைச் செய்யுங்கள்.



சமாதான காலத்திலும் யுத்தகாலத்திலும்



டீயை நம்புங்கள்

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது.

IK 253 TM

கம்பர் தரும் காட்சி

டி.கே.சி.

151. நம்ப முடியுமா?

இராவண தர்பார் நடக்கிறது, நடக்கட்டும். தர்பாரை விட்டுவிட்டு அவனுடைய தங்கை இலங்கை நோக்கி வருகிறாளே, அவளைப் பார்க்கலாம்.

> தங்கையும் அவ்வழி
> தலையில்த் தாங்கிய
> செங்கையள், சோரியின்
> தாரை சேந்திழி
> கொங்கையள், மூக்கினள்,
> குழையில் காதினள்;
> மங்குலின் ஒலிபடத்
> திறந்த வாயினள்;

[தங்கையும் அவ்வழி: சூர்ப்பனகை இலங்கையை நோக்கி வருபவளாய்: தலையில் தாங்கிய செங்கையள்: தலையிலே கையை வைத்துக் கொண்டு—தலையில் அடித்துக் கொள்ளும் பாவனையில்; சோரியின் தாரை சேர்ந்து இழிகொங்கையள் மூக்கினள்: ரத்தப் பெருக்கானது ஒரே செந்நிறமாய் வடிகிற கொங்கையள் மூக்கினள்; குழையில் காதினள்: அறுபட்ட காரணமாக காதில் யாதொரு நகையும் இல்லாதவளாய்—மூளியாய்: மங்குலின் ஒலிபட: மேகத்தின் இடிதானோ என்று சொல்லும்படி: திறந்த வாயினள்: வாயைத் திறந்து அலறினவளாய்]

"ஐயோ, இந்த அநியாயத்தைப் பார்த்தீர்களா!" என்று பெருங் கூச்சலிட்டுக் கொண்டு சூர்ப்பனகை வருகிறாள்.

> மூடையுடை வாயினள்
> முறையிட்(டு) ஆர்த்தெழக்,
> கடையுகக் கடல்ஒலி
> காட்டிக் காந்துவாள்,
> குடதிசைச் செக்கரின்
> சேந்த கூந்தலாள்,
> வடதிசை வாயிலின்
> வந்து தோன்றினாள்.

[மூடை உடை வாயினள்: மாமிசமும் அதன் வாசனையும் பற்றி இருந்த வாயினள்; முறையிட்டு ஆர்த்தெழ: "ஐயோ! ஓ!" என்று பேரொலி எழ; கடையுகக் கடல் ஒலி காட்டி: யுகமுடிவில் உலகத்தை யெல்லாம் அழிக்க வரும் அந்தக் கடலின் ஒலிபோல் சப்தித்துக் கொண்டு: காந்துவாள்: ஆங்காரம் கொண்டவளாய்; குடதிசைச் செக்கரின் சேந்த கூந்தலாள்: மேற்குத் திசையில் காணும் செவ்வானம் போல் ஒரே செம்பட்டையான கூந்தலை உடையவளாய்.]

இலங்கையின் வடக்குக் கோட்டை வாசலுக்கு வந்து சேருகிறாள். மூக்கறுபட்டுக் காதறுபட்டு "ஓ!" என்றலறிக் கொண்டு வருகிறாள். யார்? இலங்கைக்கு அரசனான ராவணேசுவரனுடைய அருமைத் தங்கை!

கோட்டை வாசலைக் காத்துக்கொண்டு உட்புறத்தில் நின்ற வீரர்கள் திரும்பிப் பார்த்தார்கள். வந்தவள் ராவணேசுவரனுடைய தங்கையென்று அவர்களுக்குத் தென்பட்டு விட்டது.

> பொருக்கெனா நோக்கினர்;
> புகல்வ(து) ஓர்கிலர்;
> அரக்கரும் இரைத்தனர்
> அசனி யாமென;
> கரத்தொடு கரங்களைப்
> புடைத்துக், கண்களை
> நெருப்பெழ விழித்து,வாய்
> மடித்து நிற்கின்றார்.

[அரக்கரும் இரைத்தனர் அசனியாம் என: அரக்கராகிய காவலர்களும் ஒரே கூப்பாடாய்க் கத்தினார்கள் பேரிடிபோல.]

எவ்விதத்திலும் எதிர்பார்க்க முடியாதபடி சூர்ப்பனகையை மானபங்கக் கோலத்தில் திடீரென்று பார்க்க நேர்ந்ததும் அரக்கர்களுக்குத் திகைப்பு, பயம், அவமானம், கோபம் எல்லாம் உண்டாகிவிட்டது. ஓவென்று அலறினார்கள்;

கையோடு கையை மோதினார்கள்; நெருப்புப் பொறி பறக்க விழித்தார்கள்; உதட்டைக் கடித்தார்கள்.

கோபவெறியில் என்னவெல்லாமோ எண்ணத் தோன்றுகிறது அந்த வீரர்களுக்கு.

"ராவணனுடைய தங்கையை இப்படிக் கேவலப் படுத்தத் தைரியம் உள்ளவர்கள் யார்தான் இருக்கிறார்கள்? இந்த உலகில் யாரும் இல்லை. தேவலோகத்திலுள்ள தேவேந்திரன்தான் இந்தக் காரியத்தைச் செய்திருப்பான்; அவனுக்குத்தான் கெட்டகாலம் போலிருக்கிறது!" என்று சிலர் அரற்றினார்கள். இன்னும் மும்மூர்த்திகளின் பேரிலும் சிலர் சந்தேகப் பட்டார்கள்.

'இந்திரன் மேலதோ!
உலகம் ஈன்றபேர்

அந்தணன் மேலதோ!
ஆழி யானதோ!

சந்திர மௌலிபால்
தங்கு மேகோலோ,

அந்தரம்!' என்றுநின்(று)
அழல்கின் றார்சிலர்.

[உலகம் ஈன்றபேர் அந்தணன் மேலதோ இந்த அக்கிரமத்திற்கு உலகத்தை யெல்லாம் படைத்த பிரமன் பொறுப்பாளியோ; ஆழியானதோ: சக்கரத்தை ஏந்திய திருமால் தானோ அல்லது; சந்திரமௌலிபால் தங்கு மேகோலோ: பிறைச் சந்திரனை அணிந்த சிவபெருமான் தான் பொறுப்பாளியோ; அந்தரம்: அக்கிரமம்; அழல்கின்றார் சிலர்: ஓர் கோபாவேச வெறியில் கத்துகிறார்கள்.]

ராவணனுக்கு இவ்வுலகில் பகைவர் என்று எடுத்துச் சொல்ல ஆளும் இருக்கிறதா என்பது சிலருடைய சந்தேகம்.

'செப்புறற்(கு) உரியவர்
தெவ்வர் யாருளர்?

முப்புறத்(து) உலகமும்
அடங்க மூடிய

இப்புறத்(து) அண்டத்தோர்க்(கு)
இயைவ தன்(று)இது

அப்புறத்(து) அண்டத்தோ
ராம்'என் றார்சிலர்.

[செப்புறற்கு உரியவர் தெவ்வர்: பகைவர் என்று வாயெடுத்துச் சொல்ல யார் இருக்கிறார்கள்; முப்புறத்து உலகமும் அடங்க மூடிய: பாதாளம், பூமி, வானம் ஆக மூன்றையும் மூடியுள்ள; இப்புறத்து அண்டத்தோர்க்கு இயைவது அன்று இது: நாம் பார்க்கிற பேரண்டத்தின் இப்புறத்தில் வாழ்பவர்களால் இப்படிச் செய்ய முடியாது; அப்புறத்து அண்டத்தோராம் என்றார் சிலர்: பேரண்டத்துக்கு வெளியே யுள்ளவர்கள் தான் இதைச் செய்திருக்க வேண்டும் என்று சிலர் சொல்லுகிறார்கள்.]

இப்படிப் பலபல விதமாகச் சந்தேகங்கள் கொண்ட மாதிரி பேசிக் கொண்டிருக்கிறார்கள். இதற்கிடையில், வேறு சிலருக்குப் பட்ட அபிப்பிராயம் ஒன்று; அது மிகத் துணிகரமான அபிப்பிராயந்தான்.

என்ன காரியம் இது? ராவணனது தங்கை யென்று தெரிந்தவுடனே, 'அன்னையே!' என்று அவள் காலில் விழுந்து வணங்க அல்லவா வேண்டும்? உண்மை அப்படியிருக்க, இந்த மாதிரி செய்ய யாராலாவது முடியுமா? முடியவே முடியாது! பின் என்ன நடந்திருக்க வேண்டும், தெரியுமா?......

'என்னையே! இராவணன்
தங்கை என்றபின்

அன்னையே என்(று) அடி
வணங்கல் அன்றியே,

உன்னவே ஒண்ணுமோ
ஒருவ ரால்? இவள்

தன்னையே அரிந்தனள்
தான்'என் றார்சிலர்.

[என்னையே: என்ன காரியமிது; உன்னவே ஒண்ணுமோ: இப்படி இவளை அங்கஹீனம் பண்ணவேமென்று எண்ணத்தான் முடியுமோ? என்ன காரணத்துக்காகவோ, தானே தன்னை அங்கஹீனம் செய்து கொண்டாள்!]

ஒரு சாம்ராஜ்யத்தின் அரசியலிலும் ராணுவ இயலிலும் சதா திளைத்துக் கொண்டிருப்பவர்களுக்குத் தாங்கள்தான் வலிமை யுள்ளவர்கள் என்றும், தங்களை வெல்லக் கூடியவர்கள் உலகத்திலேயே இல்லை என்றும் எண்ணும் மமதை சாமான்யமாகக் காணுகிற விஷயம். அத்தகைய மமதையை எடுத்துக் காட்டவே மேலே யுள்ள பாடல்கள் பிறந்திருக்கின்றன.

★ திரிசிராப்பள்ளியில் 'நேஷனல் காலேஜ்' என்னும் புகழ் வாய்ந்த பெயருடன் விளங்கும் தேசியக் கல்வி ஸ்தாபனம் ஆரம்பமாகி அறுபது வருஷம் ஆகிறது. அதன் ஆரம்பம், வளர்ச்சி, வரப்போகும் வைர விழா ஆகியவற்றைக் குறித்த விவரங்களைக் கீழேயுள்ள ரஸமான கட்டுரையில் காணலாம். நேஷனல் காலேஜில் படித்துத் தேறி அந்த ஸ்தாபனத்திலேயே இன்று கல்வித் தொண்டு செய்து வரும் அறிஞர் இந்தக் கட்டுரையின் ஆசிரியர். "கல்கி" முதல் வருஷத்துச் சிறுகதைப் போட்டியில் முதற் பரிசு பெற்றவர் ஸ்ரீதரம் குருஸ்வாமி என்பது நேயர்களுக்கு நினைவிருக்கலாம்.

அறுபது வருஷத்துப் பயிர்

ஸ்ரீதரம் குருஸ்வாமி

அறுபது வருஷங்களுக்கு முன்பு ஒரு நாள் மாலை திருச்சியை யடுத்த காவிரியாற்றின் மணலில் மூன்று பேர் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். மூவரும் எஸ். பி. ஜி. பள்ளிக்கூடத்து ஆசிரியர்கள், இளம் வயதினர். அவர்களில் இருவர் பி. ஏ. பட்டதாரிகள். ஒருவர் பட்டம் பெறாதவர்.

எஸ். பி. ஜி. காலேஜ் அப்போது திருச்சி நகரத்தில் மிகுந்த பிரக்யாதியுடன் கிறிஸ்துவப் பாதிரிமார்களின் நிர்வாகத்தில் நடந்து வந்தது. அதன் பேராசிரியர்களில் பலர் இங்கிலீஷ்காரர்கள். இந்தியாவில் சமயத் தொண்டு செய்யவந்த இந்தப் பாதிரிமார்கள் ஹிந்துக்களை மும்முரமாக மதம் மாற்றும் வேலையில் ஈடுபட்டிருந்தார்கள். பைபிள் வகுப்புக்கு ஹிந்து மாணவர்கள் வர வேண்டுமென்ற கட்டாய நிபந்தனை ஏற்படுத்தினார்கள். நிலைமை நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டு வந்தது.

இளம் ஆசிரியர்கள் மூவரும் மேற்கூறிய நிலைமையைப் பற்றித்தான் காவிரி யாற்று மணலில் உட்கார்ந்து பேசினார்கள். பேசிப் பேசி முடிவில் ஒரு திட்டம் போட்டார்கள்.

அந்தத் திட்டம் என்னவென்றால், அவர்கள் மூவரும் சேர்ந்து திருச்சியில் ஒரு தனிப் பள்ளிக்கூடம் ஆரம்பிக்க வேண்டும் என்பதுதான்.

ஆனால் பல தினங்களாகச் சமூகத்தின் நிலையைக் கவனித்து மனம் சோர்ந்து உள்ளம் வெதும்பி நின்ற மூவருக்கும் அது சுலபமான காரியமாகத் தோன்றவில்லை.

அதிகார வர்க்கத்தைத் தங்களுடைய சட்டைப் பைக்குள் போட்டுக்கொண்டிருக்கும் பாதிரிமார்கள் சும்மா இருப்பார்களா? ஏதாவது சாக்கை வைத்துக் கொண்டு ஒரு நிமிஷத்தில் கலக்கிக் கலைத்து விட மாட்டார்களா! அது போகட்டும். பள்ளிக்கூடம் ஆரம்பிப்பதென்றால் அதற்கு எத்தனையோ சாதனங்கள் வேண்டுமே? கட்டிடத்திற்கும் பெஞ்சு நாற்காலிகளுக்கும் ஆசிரியர்கள் சம்பளத்திற்கும் எங்கே போவது?

காவிரி யாற்று மணலில் உட்கார்ந்து இவ்விதம் சிந்தனையில் ஆழ்ந்தனர்கள் மூன்று ஆசிரியர்களும். தங்களுக்குக் காயமான வேலை கைமேல் இருக்கிறது. முப்பது நாள் உழைத்தால் முதல் தேதி சம்பளம் நிச்சயம். கொடுப்பவர் கிறிஸ்துவரா யிருந்தால் என்ன, வேறு யாராயிருந்தால்தான் என்ன? நாம் என்ன, முற்றும் துறந்த சந்நியாசிகளா, குடும்பப் பொறுப்பை உதறித் தள்ளி, எல்லாவற்றையும் துறந்து



ஸ்ரீ பி. ஏ. சுந்தரேச சாஸ்திரிகள் தமது சொந்தச் சிருஷ்டியான நேஷனல் காலேஜின் சஷ்டி அப்த பூர்த்தி விழாவை நேரில் நடத்தி வைக்கும் பாக்கியத்தைப் பெற்றிருக்கிறார். தற்போது இவருக்கு வயது 81 ஆகிறது.

தியாகம் செய்ய? நாலு பேர் நம்மைப் பைத்தியம் என்பார்களே தவிர உதவி செய்ய முன் வர மாட்டார்களே!

இப்படி யெல்லாம் ஆட்சேபங்கள் தோன்றிய போதிலும் முடிவில் தீர்மானம் ஏற்பட்டு விட்டது. எப்படியும் இந்தத் தியாகத்தை நாம் செய்யத்தான் வேண்டும். கடவுள் நம்மைக் கை விட்டு விடமாட்டார். அப்புறம் இருக்கவே இருக்கிறது! நாட்டின் அதிர்ஷ்டம் போல்தான் நம் அதிர்ஷ்டமும்.

ஒரு சின்ன விஷயம் பாக்கி இருக்கிறது. அந்த மூவரில் ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு வகையில் விசேஷத் திறமை. புலமையும் வாக்கு விலாசமும் ஒருவருக்கு நிறைந்திருக்கிறது; நிர்வாக சக்தியும் கம்பீரமான தோற்றமும் இன்னொருவருக்கு உண்டு. ஆனால் இப்போது இவர்கள் போட்டுள்ள திட்டம் நிறைவேற இன்னொரு அம்சம் அல்லவா வேண்டும்? பொது ஜனங்களின் நம்பிக்கையையும் நன் மதிப்பையும் பெறக்கூடிய தூய வாழ்க்கையும் பாந்த மனப்பான்மையும் இந்தக் காரியத்திற்கு எவ்வளவு அவசியம்? அது மூன்றாவது மனிதருக்கு இயற்கையாகவே அமைந்திருக்கிறது. இந்த வயதிலேயே அவர் சொல்லும் வார்த்தைக்குக் கட்டுப்படாத பெரிய மனிதர் திருச்சிப் பிராந்தியத்தில் இல்லை.



நேஷனல் காலேஜின் ஸ்தாபகர்கள் மூவரில் முதல்வரான ஸ்ரீ ஜி. சேஷய்யங்கார் முதலாமவராக நேஷனல் காலேஜிடமும் இரண்டாவதாக ஸ்ரீ ரங்கநாதப் பெருமாளிடமும் அபார பிரேமை வைத்திருந்தார். உடம்பில் மூச்சு இருந்த வரையில் தேசியக் கல்லூரியின் அபிவிருத்திக்காக உழைத்தார்.

மூன்றாமவரைப் பார்த்து முதல் இருவரும் சொல்கிறார்கள்:—"நாம் பலவாறு இனி யோசனை செய்ய வேண்டாம். மூன்று பேருமாகச் சேர்ந்து வேலையை சகஜமாகச் செய்வோம்; இந்தத் தொண்டில் ஈடுபடுவோம். பிறகு கஷ்ட நஷ்டங்கள் என்ன வந்தாலும் தளர்வதில்லை, பின் வாங்குவதில்லை என்று பிரதிக்ஞை செய்து கொள்வோம். ஒருவரை யொருவர் விட்டுக் கொடுப்பதில்லை. சரிதானா?"

மூன்றாமவர் சொல்லும் பதிலில் சிறிது தயக்கம் தொனிக்கிறது. அவர் சொல்கிறார்:—"நீங்கள் இருவரும் பி. ஏ. தேறியவர்கள். எந்த இடத்திற்குப் போனாலும் எப்படிப்பட்ட உத்தியோகம் வேண்டுமானாலும் உங்களுக்கு இலகுவில் கிடைக்கும். நான் பட்டதாரி அல்ல. கையில் கிடைத்துள்ள வேலையை விடுவது குடும்பஸ்தனான எனக்கு அவ்வளவு சுலபம் அல்லவே? அதுதான் யோசிக்க வேண்டியிருக்கிறது!"

மற்ற இருவரும் சிறிதும் தயங்காமல் உடனே பளிச்சென்று பதில் சொல்கிறார்கள்:—"இந்த நிமிஷம் முதல் நீங்களே எங்கள் தலைவர். நாம் ஆரம்பிக்கும் பள்ளிக்கூடத்திற்கு நிரந்தர ஹெட்மாஸ்டர் நீங்கள்தான். நாங்கள் பட்டதாரிகளான போதிலும் உங்களுக்குக் கீழ்ப்படிந்து உங்கள் 'அஸிஸ்டெண்டு'களாக மகிழ்ச்சியுடன் வேலை செய்கிறோம். அதையே எங்கள் பாக்கியமாகக் கருதுவோம். இது சத்தியம்."

எனவே, மூவரில் மூன்றாமவர் முதல்வர் ஆனார்! அன்று அந்த மும்மூர்த்திகள் போட்ட திட்டத்தின் பயனாகப் பிறந்தது தான் இந்த விய வருஷம் அறுபது வயது பூர்த்தி செய்துள்ள திருச்சி தேசியக் கல்லூரி என்னும் ஒப்பற்ற வித்தியாபீடம்.

* * *

ஸ்ரீ பி.ஜி. சுந்தரேச சாஸ்திரிகள் பி.ஏ., அவர்களும், ஸ்ரீ பி. என். வேங்கடராமண சர்மா பி. ஏ., அவர்களும், ஸ்ரீ ஜி. சேஷய்யங்கார் அவர்கள் தலைமையில் மேலே தீர்மானித்த பிரகாரம் அதே விய வருஷம் வைகாசி மாதம் முப்பதாம் தேதி (1886-ம் வருஷம் ஜூன் மாதம் 11உ) வெள்ளிக் கிழமை சுக்ல பட்ச தசமியும் ஹஸ்த நட்சத்திரமும் கூடிய சுபயோக சுப தினத்தில் "நேஷனல் ஹைஸ்கூல்" என்ற பெயருடன் ஒரு உண்மையான வித்தியாலயத்தை ஆரம்பித்தார்கள்.

நேஷனல் ஹைஸ்கூல் பிறக்கும்போதே மெட்ரிகுலேஷன் வகுப்பு முடிய எல்லா

உறுப்புகளோடும் பூரண வளர்ச்சியுடனே பிறந்தது.

ஆண்டார் தெருவில், ஸ்தல புராணப்படி சாரமா முனிவர் செவ்வந்தித் தோட்டம் வளர்த்துச் சிவன் பணி செய்ததாயும், இப்போது நாகநாத சுவாமி கோவிலைச் சுற்றிப் பலவிதமாகச் சொல்லப்படுவதாயும் உள்ள இடத்தை வாடகைக்கு வாங்கிக் கொண்டு ஆரம்பித்தார்கள். மேன் மேலும் பள்ளிக்கூடம் வளர்ந்து கொண்டே வந்தது.

அந்தக் காலத்தில் நேஷனல் ஹைஸ்கூலில் படித்தவர்கள் இமயமலை முதல் கன்னியா குமரி வரையில் பரவி, எத்தனையோ துறைகளில் ஒளி நிறைந்த வாழ்க்கை நடத்தி, அந்தப் பள்ளிக்கூடத்தையும் அதில் லட்சிய புருஷர்களாக விளங்கிய தங்கள் ஆசிரிய சிரேஷ்டர்களையும் சென்ற இடமெல்லாம் நினைத்தும், வாழ்த்தியும் தங்கள் ஜீவதசையின் பூரண எல்லையைக் கீர்த்தியுடன் அடைந்திருக்கிறார்கள். அந்த உன்னத பரம்பரை இன்றைக்கும் வளர்ந்து பெருகிக் கொண்டு வருகிறது.

மற்றச் சாதாரண ஸ்தாபனங்களைப்போல் வெள்ளி விழா வென்றும் பொன் விழா வென்றும் நடத்தி நிறைவு எய்தி விட்டதாக அவ்வப்போது நினைத்துக் கொள்ளாமல் இந்த வைர விழாவையே தனது சிரஞ்சீவி வாழ்க்கையின் முதல் விழாவாக ஏற்றுக் கொண்டிருக்கிறது இந்தத் தேசியக் கல்லூரி.


கடவுள் அருளால் மூன்று ஸ்தாபகர்களில் ஒருவரான ஸ்ரீ பி.ஜி. சுந்தரேச சாஸ்திரியார் அவர்கள் இன்று நமது சிரஞ்சீவி கிருஷ்டிக்குச் சஷ்டி அப்த பூர்த்தி நடப்பதை நேரில் காணும்படியான பாக்கியம் பெற்றிருக்கிறார்.

திருச்சி ஜில்லா கலெக்டர் ஒருவர் அந்த ஆரம்ப நாளில் பள்ளிக்கூடத்திற்கு விஜயம் செய்தபோது ஸ்ரீ பி. எஸ். வெங்கடராமண சர்மா அவர்களோடு ஒரு நிமிஷம் பேசினார். அதன் பயனாக அவரைப் பள்ளிக்கூடத்திலிருந்து பிரியா விடை பெறும்படி செய்து, அவருக்கு டெபுடி கலெக்டர் உத்தியோகம் செய்து வைத்தார். வெங்கடராமண சர்மா பர்லாகிமிடி சமஸ்தானத்தின் திவானாகவும் வெகு நாள் பதவி வகித்துக் காலக்கிரமத்தில் சிவனடி சேர்ந்தார்.

* * *

ஹெட்மாஸ்டர் சேஷய்யங்கார் அவர்களின் வாழ்க்கையும், தேசியக் கல்லூரியின் சரித்திரமும் வெவ்வேறானவை அல்ல. தனியே பிரிக்க முடியாதபடி ஒன்றோடொன்று இணைந்தவை யாகும்.

திருச்சி தேசியக் கல்லூரியின் இந்த முன் வாசல் வழியாக எத்தனையோ இளம் பிள்ளைகள் சிறந்த கல்வியும் பண்பாடும் தெய்வ பக்தியும் தேச பக்தியும் அடைந்தவர்களாக வெளியேறித் தேசத்தின் நாலு திசைகளுக்கும் சென்று வாழ்கிறார்கள்.




தேச பக்தியும் கல்விப் பற்றும் மதாபிமானமும் ஸ்ரீ சேஷய்யங்காரிடம் இணைந்து இருந்தன. திருச்சி ஜில்லாவின் முதல் காங்கிரஸ் வாதி அவர். சிலகாலம் ஜில்லா காங்கிரஸ் கமிட்டியின் காரியதரிசியாகவும் விளங்கினார்.

வெளியிடங்களில் பள்ளிக்கூடம் ஆரம்பிப்பவர்கள் ஹெட்மாஸ்டர் சேஷய்யங்காரை வந்து அழைத்துச் சென்று அவர் கையால் ஆரம்பப் பணியைச் செய்வித்து மகிழ்ந்தார்கள். மற்ற எவ்விதமான ஸ்தாபனங்களை உண்டாக்க நினைப்பவர்களும் அப்படியே. கல்விக்காக அவர் செய்ததை யெல்லாம் துரைத்தனத்தார் கூடப் பாராட்டி ஏழாம் எட்வர்ட் மன்னர் முடி சூடிய காலத்தில் அவருக்கு ஒரு யோக்கியதா பத்திரம் வழங்கிக் கௌரவித்தார்கள். ஆயிரம் மாணவர்களுக்கு உணவளித்து அறிவூட்டிய மகரிஷியை 'குலபதி' என்று வேத காலத்தில் சொல்வது வழக்கம். சென்னை மாகாண ஆசிரியர் மகாநாடு அந்தக் 'குலபதி' என்னும் பட்டத்தைச் சேஷய்யங்காருக்குச் சூட்டிக் கௌரவம் பெற்றது. ஸ்ரீ சேஷய்யங்காரின் பெருந்தன்மையை விளக்க ஓர் உதாரணம் மட்டும் சொன்னால் போதுமானது. அவர் எஸ்.பி.ஜி. காலேஜை விட்டு நீங்கினார்; நேஷனல் ஹைஸ்கூலை நிர்வகித்து நடத்தினார். இருந்த போதிலும் அந்த இரண்டு கல்விச் சாலைகளுக்குள் போட்டியோ பொறாமையோ ஏற்படவில்லை. இரண்டு ஸ்தாபனங்களின் நிர்வாகிகளும் ஆசிரியர்களும் தோழமையோடும் சகோதர உணர்ச்சியோடும் பொதுக் காரியங்களில் ஈடுபட்டு ஒத்துழைத்தார்கள்.

துறைமுகத்தில் நங்கூரம் பாய்ச்சி நிற்கும் கப்பலுக்குப் புயலைக் கண்டு பயமில்லை. சேஷய்யங்காரின் வாழ்க்கைக்கு இரண்டு நங்கூரங்கள் உண்டு. ஒன்று, அவருடைய பள்ளிக்கூடம்; இரண்டாவது, ஸ்ரீரங்கநாதரிடம் அளவற்ற பக்தி.

காலையில் எழுந்ததும் அவர் பள்ளிக்கூடத்திற்காக நிதி வசூலிக்கப் புறப்பட்டு விடுவார். நகரத்துக்கு பெரும்பாலும் நடந்தே செல்வார். சுற்றுப்புற கிராமங்களுக்கு வண்டியில் போவார். சரியாக பத்து மணிக்குப் பள்ளிக்கூடம் திரும்புவார். கறுப்புக் கோட்டுடன் அங்கே காத்திருக்கும் அதை மாட்டிக்கொண்டு வகுப்பில் நுழைந்ததும் கணித ஆசிரியர் ஆவார். எந்தப் பாட புத்தகத்திலுள்ள எந்தக் கணக்கும் அவருக்கு மனப் பாடம். அலைச்சலோ கவலையோ நிறைந்த காலைவிருந்தாலும் வகுப்பிலுள்ள மாணவர்கள் அதைத் தெரிந்து கொள்ள முடியாது. அவரிடம் ஒரு முறை பாடம் கேட்டவர்கள் அதை என்றைக்கும் மறந்ததில்லை. பாட போதனை அவரிடம் அவ்வளவு ஸ்பஷ்டமாக இருக்கும்.



ஸ்ரீ பெத்தாச்சி செட்டியார். (திருச்சி நேஷனல் காலேஜுக்குத் தாராளமாக நன்கொடை யளித்த வள்ளல்களில் ஒருவர்.)

பள்ளிக்கூடத்திற்காகக் கட்டிடம் கட்டிய காலில், கட்டட வேலையின் ஒவ்வொரு அம்சமும் அவருடைய நேர் மேல் பார்வையில் நடந்தது. திருவானைக்காவலிலுள்ள செங்கல் சூளையைத் தினம் போய்ப் பார்த்து அதற்கு வேண்டியதைச் செய்வார். சுண்ணாம்பு அரைக்கும் இயந்திரம் இத்தனைச் சுற்று வந்தால்தான் அதற்குச் செவ்வையாக இறுகும் சக்தி வரும் என்பது அவருக்குத் தெரியும். வேலையாள் எவனும் அவரை இம்மியளவுகூட ஏமாற்ற முடியாது. யாரோடு பேசினாலும் அன்பொழுகத் தன்மையின் பரிவுடனேதான் பேசுவார். ஆனால் அவருக்கு என்று அமைந்த நடையோடு தலையைக் குனிந்து கொண்டு அவர் காம்பவுண்டில் நுழைந்து வரும்போது எல்லாருக்கும் மனதிலே கொஞ்சம் பயந்தான்.

சேஷய்யங்கார் அன்று கட்டிய கட்டிடத்தில் இன்றுவரை பழுது பார்க்க அவசியமே நேரவில்லை. 'தட்டினால் வெண்கலம் போல் சத்தம் கேட்கும்' என்று பெருமையோடு சொல்வான் அவருடைய பியூன் மருதை. இந்தத் தள்ளாத பருவத்திலேகூட அவனுடைய பழைய எசமானின் பெயரைச் சொன்னால் போதும்,—மருதையின் கண்களில் ஒளி வீச ஆரம்பிக்கும்.

சேஷய்யங்கார் பெரிய குடும்பஸ்தர். அவருடைய வீடு கூரை வேய்ந்தது வேய்ந்தபடிதான் இருந்தது. இரண்டு முறை அக்னி பகவானும் அவருடைய வீட்டுக் கூரையை ருசி பார்த்து விட்டான். லட்சக் கணக்கில் செங்கல்லைச் சூளை போட்டுப் பள்ளிக்கூடத்திற்கென்று எடுத்துச் சென்றவருக்குத் தம் வீட்டை மேல் புறம் 'ஓட்டுவது' பிரமாத காரியமில்லை. அப்படிச் செய்யாததுதான் அவருடைய வெற்றியின் ரகசியம்.

கட்டிடம் எழுந்தோடு சேஷய்யங்கார் அவர்களின் திட்டம் முடிந்து விடவில்லை. சிருங்கேரி மடாதிபதியை அணுகினார். மடத்தின் செலவில் ஹைஸ்கூல் மாணவர்களுக்கு இந்துமதத் தத்துவங்களைப் போதிக்க ஒரு பண்டிதரை ஏற்படுத்தினார். கோயமுத்தூர் ஜில்லாவிலிருந்த வள்ளல் கணியூர் கிருஷ்ணய்யர் ஹெட்மாஸ்டர் சேஷய்யங்காருடைய கைங்கரியத்தில் அபிமானம் கொண்டார். இருபத்தைந்து ஏழை மாணவர்களுக்கு உணவு அளிக்கவும், இங்கிலீஷ் படிப்போடு வேதம் முதலியன ஓரளவு தெரிந்து கொள்ள ஏற்பாடு செய்யவும் சிரத்தமான நன்கொடையாக ஐம்பது ஏகரா அயன் நஞ்செய் நிலத்தை அந்தச் சீமான் எழுதி வைத்தார். அவர் ஏற்படுத்திய தருமம் இன்றளவும் விமரிசையாக நடந்து வருகிறது.

காளடையில் கொடியாலம் வாசுதேவ ஐயங்கார், தோட்டா செட்டியார் குடும்பத்தார், உடையார் பாளையம் ஜமீன்தார், திவான்பகதூர் பெத்தாச்சி செட்டியார், திவான்பகதூர் ராமசாமி செட்டியார் முதலியவர்களின் நன்கொடைகள் வருவதற்கும் ஸ்ரீ சேஷய்யங்காரின் ஊக்கமும் சுயநலமற்ற சேவையுமே காரணங்களாகும்.

பள்ளிக்கூடத்தைத் தமது பிரத்தியேக உடைமையாக அவர் வைத்துக் கொண்டிருந்தாரானால் அதை யாரும் ஆட்சேபித்திருக்க மாட்டார்கள். ஆனால் அது பொது ஜனங்களுடைய சொத்து. பொது ஜனங்களுக்கு அதில் என்றென்றைக்கும் கருத்து இருக்கவேண்டும் என்பதற்காகச் சேஷய்யங்கார் ஒரு காரியம் செய்தார். தாம் வளர்த்த பயிர் வேர் ஊன்றிப் பலன் கொடுக்க ஆரம்பித்ததும் அதைப் பராமரிக்கும் பொறுப்பையும் உரிமையையும் பொது மக்களுக்கு மாற்றி விட்டார்.

(அடுத்த இதழில் முடியும்)

● ★ ●

★ நமது பஞ்சாயத்தார் ★

1. ஸ்ரீ பொ. திருகூடசுந்தரம் பிள்ளை, எம்.ஏ., பி.எல்.,
   ஆசிரியர், தமிழ் "ஹரிஜன்", சென்னை.
2. ஸ்ரீ தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான் எம்.ஏ.,
   திருநெல்வேலி.
3. ஸ்ரீ என். ராமஸ்வாமி, (துமிலன்)
   ஆசிரியர், "மாலதி", தியாகராயநகர்.
4. ரஸிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியார், பி.ஏ., பி.எல்.,
   குற்றாலம்.
5. ஆசிரியர், "கல்கி", சென்னை.

மேற்கண்ட ஐவரும் நமது 1946-ம் வருஷத்துக் "கல்கி" சிறுகதைப் போட்டிக்குப் பஞ்சாயத்தாராக நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். மேற்படி சிறுகதைப் போட்டிக்குக் கதைகள் அனுப்ப வேண்டிய முடிவு தேதி: **30-9-46**

மானேஜர், **"கல்கி", கீழ்ப்பாக்கம், சென்னை.**

வறுமையில் அதிருஷ்டம்



ஸத்யதாமா

“விஜயா! சாயங்காலம் நன்றாகச் சமையல் செய்து வை. அந்த இன்ஸ்பெக்டரைச் சாப்பாட்டுக்கு அழைத்து வரலா மென்று இருக்கிறேன். செலவுக்கே போதாமல் குழந்தை குட்டிகளுடன் இப்படி கஷ்டப்படுகிறோம். அவரிடம் சொல்லி சம்பள உயர்வுக்குச் சிபார்சு பெற முயன்று பார்க்கிறேன். ஆகவே, எல்லாவற்றையும் ஜாக்கிரதையாகச் செய்து வை!” என்று தன் கணவர் சொல்லி விட்டுப் போன வேலைகள் யாவும் முடிந்து விட்டன. திருப்தியின் சாயை அவள் முகத்தில் படிந்தது. கணவன் வரும் நேரமும் ஆகி விட்டது. அதற்குள்ளாகத் தன்னைச் சற்றே செம்மைப்படுத்திக் கொள்ள விரும்பிய அவள், கண்ணாடியும் சீப்புமாக வீதிப் புறமுள்ள அறைக்கு வந்து நின்றாள்.

தெருவில் குழந்தைகள் குதித்து விளையாடிக் கும்மாளம் அடித்துக் கொண்டிருந்தனர். அவர்கள் ஆரவார ஒலி காதைத் துளைத்தது. அப்பேரொலியையும் ஊடுருவிக் கொண்டு பக்கத்து வீட்டுத் திண்ணையிலிருந்து கிளம்பிய வார்த்தைகள் விஜயாவைக் கவர்ந்திழுத்தன.

“இன்னைக்கு எங்காத்திலே யாரோ விருந்துக்கு வரா; எங்க சித்தி நிறைய அப்பளம் பொரிச்சிருக்காளே!” என்று ஒரு கீச்சுக் குரல் ஒலித்தது. அது விஜயாவினுடைய தமக்கையின் குழந்தையான கண்ணனின் குரல்.

விஜயா ஏதோ சக்தியால் தூண்டப் பட்டவள்போல் சுவர் ஓரமாய்ப் போய் நின்றாள். அங்கு நின்றால் பக்கத்து வீட்டுத் திண்ணையில் பேசுவது நன்றாகக் கேட்கும்.

“அப்பளம் பொரிச்சிருக்காளா! உனக்கு நிறையக் கொடுத்தாளோல்லியோ, உங்க சித்தி?” என்றது மற்றொரு கனத்த குரல். அது வேறு யாருமில்லை; பக்கத்து வீட்டுக் காமாட்சி யம்மாள் தான்.

விஜயா கூர்ந்து கவனித்தாள். அவள் ஏன் அப்படி கவனிக்க வேண்டும்? ஏதோ குழந்தை பேச்சுத்தானே என்று கவனியாமல் இருந்திருக்க லாகாதா?

“ஒரு அப்பளம் போட்டா, தின்னுட்டேன்; அப்புறம் இன்னொன்னு தந்தா அதையும் சாப்பிட்டு விட்டுக் கேட்டேன் தரமாட்டேன்னுட்டா! அடுப்பு மேலே நிறைய இருக்கு.”

“பாவம்! குழந்தை கேட்கும்போது ‘இல்லை’ என்று சொல்ல எப்படித்தான் மனசு வரதோ? அவா, அவா பெற்றிருந்தால் தானே பிள்ளையின் அருமை தெரியும்? அவ வயத்திலே பிறந்த குழந்தையாயிருந்தால் இப்படி ‘இல்லை’ என்று சொல்ல மனசு வருமா?” என்று காமாட்சியம்மாள் கூறிய வார்த்தைகள் ஒவ்வொன்றும் கூரிய அம்புகளைப் போல் விஜயாவின் செவிகளில் விழுந்தன.

விஜயாவுக்குத் தலை சுழன்றது. அதற்கு மேல் அவளால் அங்கு நிற்க முடியவில்லை. தலையைச் சீவிக்கொள்ளாமலேயே சீப்பையும் கண்ணாடியையும் ஸ்டாண்டில் எறிந்து விட்டுக் கூடத்து ஊஞ்சலில் போய்ப் படுத்து விட்டாள்.

காமாட்சியின் வார்த்தைகள் விஜயாவின் இருதய ஆழத்தில் தைத்து விட்டன. நினைக்க நினைக்க அவள் நெஞ்சம் குமுறியது. கண்ணீர் வழிந்தோடியது. “ஐயோ, கண்ணா! நீ என் வயிற்றில் பிறக்கவில்லைதான்; ஆனாலும் உன் பேரில் எனக்கு அன்பு இல்லையா? உன்னை ஆறு மாதக் குழந்தையிலிருந்தே எடுத்து வளர்த்து

ன்தானே ? உனக்காக நான் என் ாழ்க்கையே தியாகம் செய்யவில்லையா ?" ன்று வாய்விட்டு விம்மினான்.

★

விஜயாவுக்கு வயது பதினெட்டு. பால்ய ருவம் முடிந்து யௌவனத்தின் மோகன மருகுடன் விளங்கினாள். கவலையும் துன் மும் இன்னதென்று அறிந்திராத அவள் க்கும் ஒரே ஆனந்தத்தைக் கண்டாள். ரு நாள் காலை வீட்டு வாசலில் கோல ட்டுக் கொண்டிருந்தாள் விஜயா. திடீ ரென்று ஒரு அழகிய மெல்லிய குரலில்,

"நீலக் கடலினிலே நின்றன்
நீண்ட குழல் தோன்றுதடீ !"

ன்ற பாட்டின் அடிகள் காதில் விழுந்ததும் யப்புடன் தலை நிமிர்ந்து பார்த்தாள். திர் வீட்டு மாடியின் ஜன்னல் ஓரமாய் ன்று கொண்டிருந்தான் ராதா ருஷ்ணன். அவனுடைய குளிர்ந்த கண்கள், ஜயாவின் அழகிய விரல்கள் வெண் ாவினால் சித்திரம் இழைப்பதைப் பார்த்துக் காண்டிருந்தன.

சட்டென்று விஜயா தலை கவிழ்ந்தாள். வசரம் அவசரமாக இரண்டொரு இழை ளைப் போட்டுக் கோலத்தை முடித்துக் காண்டு உள்ளே ஓடி விட்டாள். அதற்குப் ன் வெளியே வரும்போதெல்லாம் விஜயா ன் கண்கள் அவளையுமறியாமல் ஒரு ணம் எதிர் வீட்டு மாடி ஜன்னலை நோக்கிச் சல்லும். அவள் செவிகளும் ஏதோ ஒரு னிய குரலை எதிர்பார்க்கும்.

விஜயாவுக்குப் பாட்டு என்றால் உயிர். னிய சாரீரமும் உண்டு. எதாவது ஒரு ாட்டை ஒரு முறை கேட்டு விட்டால் தை அப்படியே மனதில் பதிய வைத்துக் காண்டு அப்படியே பாடுவாள்.

ராதாகிருஷ்ணனின் கீதம் அவளைக் வர்ந்திழுத்தது. அடிக்கடி எதாவது சாக்கு வைத்துக் கொண்டு எதிர் வீட்டுக்குப் போக ராம்பித்தாள். திரும்பி வரும்போது அவள் ாய் எதாவது ஒரு புது கீதத்தின் அடிகளை சைத்துக்கொண்டே இருக்கும். ராதா ருஷ்ணனும் காலேஜ் மாணவனுதலால் ஜயாவுடன் சங்கோஜமின்றிப் பழகி ந்தான்.

அன்று மாலை புஷ்பத்திற்குப் புஷ்பம் ாவிச் செல்லும் வண்டைப் போல, வர்ண டைகளில் அழகுடன் தோன்றிய விஜயா, துள்ளித் துள்ளி ஓடினாள். எதிர்வீட்டுப் படிகளில் ஏறும்போதே உள்ளே பேசுங் குரல் கேட்டது. அதுவும் ராதாகிருஷ் ணனின் இனிய குரல், அவள் பெயரை உச்சரிப்பதைக் கேட்டதும் ஏதோ ஒரு சக்தியால் கவரப்பட்டவள்போல் ஒரு விநாடி நின்று கவனித்தாள்.

"என் அம்மா, எதிர் வீட்டு விஜயாவுக்கு நல்ல குரல் இருக்கிறது, இல்லையா? உனக்கு வரும் நாட்டுப் பெண்ணும் அதுபோல் நன் ருகப் பாடக் கூடியவளா யிருந்தால்......?"

விஜயாவின் உடல் சிலிர்த்தது; உள்ளம் பொங்கியது. ஆனால் மறு விநாடியே, அவளது இன்பக் கனவுகளைக் கலைத்துக் கொண்டு மற்றொரு புதிய குரல் எழும்பியது. விஜயா அவைகளையும் கேட்கத் தவற வில்லை.

"போடா, அசடு! தத்துப் பித்தென்று உளறாதே! பாட்டு என்ன பாட்டு? சாப் பாட்டுக்குத் தாளம் போடாமலிருந்தால் போதாதா? புருஷனுக்குச் சமைத்துப் போடத் தெரிந்தால் அதுவே போதும். ஆமாம், நீ இப்படி 'விஜயா, விஜயா!' என்று பிதற்றிக் கொண்டிருப்பதைக் கேட்டால், வருகிற வாரம் உனக்குத் தம் பெண்ணைக் கொடுக்கும் விஷயமாகப் பேச வரப்போகும் ஸப் ஜட்ஜ் சந்திரசேகரன்தான் என்ன நினைப்பார் ?"

பூமியும் ஆகாசமும் சுற்றுவதுபோல் தோன்றியது விஜயாவுக்கு. எப்படியோ சமாளித்துக் கொண்டு வீடு வந்து சேர்ந் தாள். ஒருவரோடும் ஒன்றும் பேசாமல் தன் அறையில் போய்க் கதவை மூடிக் கொண்டு படுத்தாள்.

அவள் உள்ளம் விம்மியது. என்ன என்ன அவள் நெஞ்சம் வெடித்து விடும் போல் தோன்றியது—ராதாகிருஷ்ணன்! இனி அந்தப் பெயரை உச்சரிக்கக் கூடத் தனக்கு உரிமையில்லை. அந்தப் பாக்கியத்தை தான் ஸப் ஜட்ஜ் சந்திரசேகரனின் பெண் லோககசுந்தரிக்குப் போய்விட்டதே!— சிந்திக்க சிந்திக்கத்தான் அவளுக்கு உண்மை சிறிது சிறிதாக விளங்கலாயிற்று. ராதா கிருஷ்ணன் பணக்காரரின் புதல்வன். தான் ஓர் ஏழை குமாஸ்தாவின் பெண் தானே ?—அப்படி யிருக்கும்போது, ராதா கிருஷ்ணனை மனதால் நினைக்கக்கூடத் தனக்கு அருகதை யில்லையே ?

நாட்கள் நகர்ந்து மாதங்களும் சில மறைந்தன. மாலைப் பொழுது. வீதித்

திண்ணையில் வீற்றிருந்தாள் விஜயா. மெல்லென வீசிய மாலைக் காற்று, "நீலக் கடலினிலே..." என்ற கீதத்தை இசைப்பது போல் தோன்றியது அவள் செவிகளுக்கு. மறுவிநாடி அவள் கண்களும் ஆவலுடன் எதிர் வீட்டு மாடியை நோக்கின. ஆனால் அந்த மாடி, பக்கத்தில் நிற்கும் மொட்டை மரம் போல் வெறிச் சென்று காணப்பட்டது. ஆம்; ஆறு மாதங்களுக்கு முன் அம் மரம் விஜயாவின் மனமேபோல், தளிர்களும் புஷ்பங்களும் நிறைந்து இன்பத் தோற்ற மளித்துக் கொண்டு நின்றது. ஆனால் இப்போது?......

மெய்ம் மறந்திருந்த விஜயாவைத் தட்டி எழுப்பியது தபால்காரனின் குரல். சயனிலைக்கு வந்த அவள் தன் அருகில் கிடந்த இரண்டு கடிதங்களையும் எடுத்துப் பார்த்தாள். நுனியில் மஞ்சள் தடவப்பட்டிருந்த ஒரு கடிதம், அவள் கண்களையும் சிந்தனையையும் ஒருங்கே கவர்ந்தது. பரபரப்புடனும் ஆவலுடனும் அதைப் பிரித்து அவசரம் அவசரமாகப் பார்த்தாள்.

அது ஒரு கலியாணப் பத்திரிகை. லோகசுந்தரி — ராதாகிருஷ்ணன் என்ற எழுத்துக்கள் ஒரு கணம்தான் அவள் கண்ணில் பட்டன. அடுத்த நிமிடம் அவளையும் அறியாமலேயே கண்களில் நிறைந்த நீர்வெள்ளம் அவற்றையும் மறைத்தது. சற்று நேரத்திற்கெல்லாம் அவள் தந்தை அங்கே வந்து கையிலிருந்த கடிதங்களை வாங்கிக் கொண்டதும், ஊரில் தம் மூத்த பெண் சிவகாமிக்கு உடம்பு சரியில்லை என எழுதியிருப்பதாகத் தன் அம்மாவுடன் சொல்லிக் கொண்டிருந்ததும் ஏதோ கனவில் கேட்பது போல் தோன்றியது அவளுக்கு...



விஜயாவின் சிந்தனை வேகம் ஒரு கண தடைப்பட்டது. ஒரு நெடிய மூச்சு அவ நெஞ்சிலிருந்து பீறிட்டுச் சென்றது வெளியே வீதியில் குழந்தைகளின் கும்ம ளம் இன்னும் கேட்டுக் கொண்டுதா னிரு தது. அந்தக் கும்மாளத்திற்கு இடையே கேட்ட குழந்தை கண்ணனின் கீச்சுக் குர அவள் உடலைச் சிலிர்க்கச் செய்தது.

கண்ணனின் குரல் கேட்டதும் மீண்டு சிந்தனை பின்னோக்கியது. அன்று மரண படுக்கையில் சிவகாமி திணறிக் கொண் டிருந்த தோற்றமும், தான் வீராவேச துடன் அவளுக்கு வாக்களித்த காட்சியு பளிச்சென்று அவள் கண் முன்னே வந்து நின்றன.


கட்டிலில் கிடத்தப்பட்டிருந்த சிவகாமி கண்ணை மூடிக் கிடந்தாள். அவள் மூச்சு திணறிக் கொண்டிருந்தது. கட்டிலின் இரு புறமும் அவள் தாயும் தந்தையும் கவலை தோய்ந்த முகத்துடன் நின்று கொண் டிருந்தார்கள்.

சிவகாமியின் கண்கள் மெல்லத் திறந்து கொண்டன. குழி விழுந்து ஒளி குன்றிய அக்கண்கள் சுற்றிலும் ஒரு முறை சுழன்று விட்டு, விஜயாவையும் அவள் கையிலிருந்த குழந்தையையும் மாறி மாறிப் பார்த்தன.

அன்று முழுதும் கண்ணை திறவாது கிடந்த பெண் விழித்துக் கொண்டதைப் பார்த்ததும் உணர்ச்சி நெஞ்சை அடைக்கும் குரலுடன் "என்ன வேண்டும் அம்மா, சிவகாமி!" என்று பரிவுடன் வினவியபடியே, அவள் நெற்றியில் முத்து முத்தாய் அரும்பிய வியர்வைத் துளிகளைத் தன் முந்தானையால் துடைத்து விட்டாள் அம்மா.

"அம்மா!" என்று ஆரம்பித்தாள் சிவகாமி. "ஆச்சு, இன்னும் கொஞ்ச நேரம் தான் ......அப்புறம்......என் ஸ்தானத்தில் வேறு ஒருத்தி வந்தால் குழந்தைகளின் கதி எப்படியாகுமோ? அவருக்கும் அப்படி யொன்றும் வயதாகிவிட வில்லை ...... நம் விஜயாவையே......" என்று ஒரே மூச்சில் சொல்லி நிறுத்தினாள். அதற்குமேல் அவளால் பேச முடியவில்லை.

விஜயாவின் மூளை விறுவிறு வென்று வேலை செய்தது. அவள் இருதய ஆழத்தில் ஒரு விநாடி ராதாகிருஷ்ணனின் குளிர்ந்த முகம் தோன்றி மறைந்தது. அடுத்த நிமிஷம் அவள் கண்களில் ஒரு தீவிர ஒளி ஜொலிக்க, "அக்கா! அக்கா! நீ சற்றும் கவலைப்படாதே! குழந்தை கண்ணன் இனி



"எதிரி என்னைக் கீழே பிடித்துத் தள்ளி உதைத்ததுமல்லாமல் 'தடியன்' ...ன்று திட்டினான் ...... இதெல்லாம் ...ண்மை என்று சத்தியம் வேண்டு ...மானாலும் செய்யத் தயார்!"

...ன் குழந்தை. அவனுக்காக இதோ என் ...ாழ்வையே தியாகம் செய்கிறேன். இந்தக் ...ழந்தைகளைப் பராமரிப்பது என் கடமை. ...து சத்தியம்!" என்று கூறினாள். சிவகாமி ...ன் முகத்தில் சாந்தம் நிலவிற்று; அமைதி ...டன் கண்களை மூடிக் கொண்டாள்.

✱


"விஜயா! இன்னும் விளக்குக்கூட ...ாருத்தவில்லையா?" என்ற குரல் கேட்ட ...ம் அவள் சிந்தனை கலைந்தது. சுய நினைவு ...டைந்த அவள், வாசலில் 'டக் டக்' என்று ...ட்ஸ் காலடி ஓசை கேட்டதும், வாரிச் ...ருட்டிக் கொண்டு எழுந்தாள். "ஐயோ! ...வர்கள் வரும் நேரங்கூடத் தெரியாமல் ...ப்படிப் பைத்தியக்காரியாக இருந்து விட் ...டேனே!" என்று தன்னைத் தானே நொந்து ...காண்டு, அவசரம் அவசரமாகத் தன் கூந் ...லையும் உடைகளையும் திருத்திக் ...காண்டாள்.

அதற்குள் "விஜயா, விஜயா!" என்று ...ப்பிட்டுக் கொண்டே அவள் கணவன் ...ங்கே வந்து விட்டார். வெளியே மாலை ...வெளிச்சம் இன்னும் மறையவில்லை. ...னால் வீட்டின் உள்ளே இருள் கவியத் ...தொடங்கிவிட்டது. அந்த இருட்டிலும்கூட ...ஜயாவின் முகத்தைக் கவனித்துவிட்ட ...வள் கணவன் திடுக்கிட்டவராய், "விஜயா! ...ன் இப்படி உன் கண்கள் சிவந்து முகம் ...ன்னமோபோல் இருக்கிறது? உடம்புக்கு ...ன்ன?" என்று வினவியபடியே அவள் ...ற்றியில் கையை வைத்துப் பார்த்தார்.

"ஒன்றுமில்லை, கொஞ்சம் தலைவலியாக ...ருந்தது!" என்று தடுமாற்றத்துடன் சொல்லிக்கொண்டே அவர் கையை எடுத்து விட்டு உள்ளே சென்றாள்.

விஜயா சமையல் அறையில் காப்பி ஆற்றிக் கொண்டிருந்தாள். வீதித் திண்ணையில் பேசும் குரல் அவள் செவிகளில் விழுந்தது. விஜயாவின் கணவர் தன் கஷ்டங்களையெல்லாம் இன்ஸ்பெக்டரிடம் சொல்லிக் கொண்டிருந்தார். சாமான்களின் விலைவாசிகள் ஒன்றுக்குப் பத்து மடங்கு உயர்ந்து விட்ட இக்காலத்தில் தனக்குக் கிடைக்கும் சொற்ப சம்பளம் செலவுக்குப் போதாமல் மனைவி மக்களுடன் கஷ்டப்படுவதாகவும், மற்றும் பலவும் சொல்லிக் கொண்டிருந்தார்.

அவர் சொல்வதைக் கேட்டு விட்டு இன்ஸ்பெக்டர் ஏதோ பதில் சொன்னார். அவர் கூறியது என்னவென்று அவளுக்குச் சரியாகக் கேட்கா விட்டாலும், அந்தக் குரல் மட்டும் எப்போதோ எங்கேயோ கேட்டது போல் தோன்றியது. எப்போது கேட்டோம், எங்கே கேட்டோம் என்று யோசித்துக் கொண்டே கையில் காப்பி டம்ளருடன் மெல்ல வீதிப் பக்கம் வந்தாள்.



காப்பியுடன் வந்த விஜயாவைக் கண்டதும் அவள்

கணவர் எழுந்தார். இன்ஸ்பெக்டரும் நிமிர்ந்து பார்த்தார். அவர் முகத்தைக் கண்டதும் விஜயாவுக்குத் தூக்கிவாரிப் போட்டது. ஆம்; அதே முகம்தான்! மூன்று வருடங்களுக்கு முன் தன் மனதைக் கொள்ளை கொண்ட ராதாகிருஷ்ணனுடைய அதே முகம்!—அவள் தேகம் கிடுகிடென ஆடியது.

டம்ளரை வாங்கிக் கொள்வதற்காக எழுந்த அவள் புருஷன், "ஐயோ! உடம்பு சரியாக இல்லாவிட்டால் உன்னை யார் கொண்டு வரச் சொன்னது? நானே எடுத்துக் கொண்டு வந்திருப்பேனே!" என்று கூறித் தலையில் அடித்துக் கொண்டார்.

"கிடக்கிறது; கோபிக்காதீர்கள்! உடம்புக்கு என்ன?" என்று இன்ஸ்பெக்டர் தடுமாறுவதையும், அவர் முகமும் ஏதோ ஒருவித மாறுதலடைந்திருப்பதையும் கண்டு காரணம் தெரியாமல் விழித்தார் விஜயாவின் கணவர்.

• • •

இது நடந்து பத்து நாட்கள் ஆகியிருக்கும். அன்று ஞாயிற்றுக்கிழமை. காலையில் காப்பி சாப்பிட்டதும் விஜயாவின் கணவர் வீதித் திண்ணையில் உட்கார்ந்து கொண்டு ஏதோ பையன்களின் நோட்டுகளைத் திருத்திக் கொண்டிருந்தார். அப்போது தபால்காரன் அவருடைய கையில் ஒரு கவரைக் கொடுத்து விட்டுச் சென்றான்.

கவரைப் பார்த்ததுமே, அது இன்ஸ்பெக்டர் ஆபீஸிலிருந்துதான் வந்திருக்கிறது என்று தெரிந்தது. என்ன வந்திருக்கிறதோ என்னமோ என்று நெஞ்சு படபடக்க அதைப் பிரித்துப் பார்த்தார். மறு கணம் அவர் முகம் மலர்ந்தது. "விஜயா!" என்று ஆனந்தம் மேலிடக் கூவினார்.

விஜயா வந்து மௌனமாக நின்றாள்.

"இன்ஸ்பெக்டர் — நல்லவர் — போனதுமே 'ஆர்டர்' போட்டு விட்டார். என்னை ஹெட்மாஸ்டராக வேலை ஒப்புக் கொள்ளும்படி உத்தரவு வந்திருக்கிறது. நீ அதிர்ஷ்டக்காரிதான், போ!" என்று கூறி அவள் கன்னத்தில் லேசாகத் தட்டினார். ஆனால் அவள் முகத்தில் எவ்வித மாறுதலும் காணப்படவில்லை. அவள் உள்ளத்தில் அப்போது குமுறிய எண்ணங்களை அவர் எப்படி அறிவார், பாவம்!

காலக்ஷேபம்

கிடைத்து விட்டது!

கூட்டம் நிறைந்த டிராம் வண்டியில் ஒருவர்:— யாராவது ஒரு காகிதப் பையில் போட்டு கட்டுக் கரன்ஸி நோட்டுகளை நழுவ விட்டு விட்டீர்களா?

பல குரல்கள் (ஏககாலத்தில்):—ஆமாம், ஆமாம்!

ஒருவர் (மிகவும் அமைதியாக):—நல்லது. அந்தக் காகிதப் பை மட்டும் எனக்கு இங்கே கிடைத்திருக்கிறது!

வழக்க மில்லையே!

ஜெயில் வார்டர் இரவு 12 மணிக்குச் சிறைச் சாலையைச் சுற்றி வந்தார். திருட்டு முனிசாமி மாத்திரம் தூங்காமல் உட்கார்ந்திருப்பதைக் கண்டார்.

வார்டர்:—என்ன, இன்னுமா நீ தூங்கவில்லை?

முனிசாமி:—தூக்கமா? நடு ராத்திரியில் நான் என்றைக்குத் தூங்கியிருக்கேனுங்க.

நல்ல இடம்!

ஒரு கம்பெனி வாசலில் பின்வரும் விளம்பரப் பலகை தொங்கவிடப் பட்டிருந்தது:—

"வேறு எந்த இடத்துக்கும் போய்ப் போலிச் சாமான்களை வாங்கி ஏமாற வேண்டாம்; தயவு செய்து இங்கேயே வாருங்கள்!"

பலசாலி!

முருகன்:—ஒரு தடவை எங்க அப்பா ஓடுகிற ரயிலை ஒரு கையினாலேயே பிடித்து நிறுத்திவிட்டார், தெரியுமா?


ராமன்:—அது எப்படியடா?

முருகன்:—அபாய அறிவிப்புச் சங்கிலியைப் பிடித்து இழுத்தார்; ரயில் உடனே நின்று விட்டது!

இரண்டு பேர் வேலை!

மானேஜர் (கோபத்துடன்):— மிஸ்டர் சிவராமன், நீர் உம்முடைய வேலையைச் சரியாய்ச் செய்யமாட்டேன் என்கிறீர். எவ்வளவு எச்சரிக்கை செய்தும் பயனில்லை. நான் இன்னொரு குமாஸ்தாவைப் போட்டுக் கொள்ள வேண்டியதுதான்......!

சிவராமன்:—ரொம்ப ரொம்ப சந்தோஷம். இரண்டு பேருக்கு வேண்டிய வேலை இங்கே ஏராளமாக இருக்கிறது!



ஸலமா

இ. தங்கப்பன்

"ஸலமா, பொழுது சாயுமுன் அவசியம் வந்துவிடுவேன். தாஜ்மஹாலை நிர்மாணித்த எல்லாச் சிற்பிகளுக்கும் இன்று பாதுஷா வெகுமதிகள் கொடுக்கப் போகிறார்" என்றான் ஹபீப்.

கண்களை யிழந்த ஸலமா சந்தோஷத்தால் மலர்ந்த தனது முகத்தை ஹபீப் பக்கம் திருப்பினாள்.

"பாதுஷா எவ்வளவு உதார குணமுள்ளவர்! அவர் என்னென்ன வெகுமதிகள் கொடுக்கப் போகிறாரோ?" என்றாள்.

ஹபீப் தன் அன்பிற்கு அடையாளமாக ஸலமாவின் கன்னத்தைக் கிள்ளினான். பிறகு அவளைப் பார்த்து, "ஆம் அன்பே, இன்று இந்த ஏழை ஹபீப் கூட தன்னுடைய ஸலமாவுக்கு ஏதாவது பரிசு கொண்டு வருவான் — ஒரு சிறு முத்து மாலையாவது கிடைக்கலாம்" என்றான்.

"முத்து மாலையா? நான் கனவில்கூட நினைக்க முடியாததா?"

சிறிது நேரம் அங்கு நிசப்தமாக இருந்தது. ஸலமா பேச்சை மாற்றினாள்.

"ஹபீப், நீ நிர்மாணித்த அந்தத் தாஜ் மஹால் எவ்வளவு அழகா யிருக்கும்!" என்றாள்.

"நானா நிர்மாணித்தேன்? — இல்லை, இல்லை. நான் செய்த வேலை மிகக் குறைவு. ஆனால், ஸமோ! உலகம் வியக்கும்படியாக அமைந்துள்ள அந்தத் தாஜ்மஹாலை நீ ஒரு முறை பார்க்க முடியுமானால்......... ஆகா, எவ்வளவு அழகானது, தெரியுமா?"

"அந்த அழகுப் பொக்கிஷத்தை எனக்கு ஒரு முறை காட்ட மாட்டாயா, ஹபீப்? நான் அவசியம் அதைப் பார்க்க வேண்டும்."

"என் அன்பே! கண்ணை இழந்த நீ அதை எவ்வாறு பார்க்க முடியும்?"

"முடியும்; பார்க்க முடியும். நீ மட்டும் சற்று உதவி செய்தால் நான் எல்லாவற்றையும் பார்த்து விடுவேன். நீ ஒரு முறை என்னை அங்கே அழைத்துப் போ. நான் என் கையால் அதைத் தடவி, என் அன்பன் ஹபீப் அமைத்த அந்த அற்புதமான சிற்பச் செல்வங்களைப் பார்ப்பேன். — என்ன பேசாமலிருக்கிறாய், ஹபீப்!

நான் நன்றாகப் பார்த்து விடுவேன். என்னை ஒரு முறை அங்கே அழைத்துப் போவாயா?"

இதன் பிறகு அவள் என்ன நினைத்தாளோ, தெரியவில்லை — அவளுடைய கண்கள் கண்ணீரைக் கக்கின. தேம்பித் தேம்பி அழத் தொடங்கினாள். உள்ளத்திலிருந்து எழுந்த ஆசைகளின் துடிப்பை அடக்க அவளால் முடியவில்லை. அவள் ஹபீபின் மடியில் குப்புறப் படுத்துக் கொண்டாள். ஹபீப் அவளுடைய நீண்ட கூந்தலைத் தன் கையால் கோதிக்கொண்டிருந்தான். பாவம் அவன் என்ன செய்வான்! அவன் எவ்வளவு முயன்றாலும் ஸலமாவுக்குக் கண்ணைக் கொடுத்து அவளுடைய துன்பத்தைப் போக்க முடியுமா?"

ஸலமா நடுங்கிய குரலில் சொன்னாள்: "ஆண்டவனே, நீ ஏழைக்கு இரங்குபவனாயிற்றே; ஏழையாகிய என்னைக் காப்பாற்ற மாட்டாயா? கண்ணை இழந்து நான் அனுபவிக்கும் துக்கம் உனக்குத் தெரியவில்லையா? என்மீது கருணைகாட்ட மாட்டாயா? நான் என்ன பாவம் செய்தேனோ?"

ஹபீப் வெகு அன்புடன் அவளுக்குத் தேறுதல் கூறினான். "ஸலமா, கடவுளை நம்பு. அவன் மிகவும் தயாளு. உன்னுடைய கண்கள் இப்பொழுது என்னிடம் இருக்கின்றன. நீ ஏன் கவலைப்பட வேண்டும்? இன்னும் சில நாட்களில் நீ குணமடைந்து விடுவாய். நாம் நம்முடைய சொந்த தேசத்துக்குத் திரும்பிப் போகலாம். ஸலமா, நம் பழைய வாழ்க்கையை நினைத்துப் பார்! அருவியோரத்தில் சிறு நீர்த்திவலைகளால் நனைக்கப்பட்ட கற்பாறையின் மேல் நீ உட்கார்ந்திருப்பாய். சலசல வென்றோடும் அருவி நீர் உன்னுடைய மென்மையான அழகிய கால்களை முத்தமிட்டுச் செல்லும். நான் அழகான மலர்களைப் பறித்து என் காதலி ஸலமாவின் கருங்குழலில் சூட்டுவேன். அப்பொழுது உன்னுடைய அழகிய கூந்தலைக் கண்டு வெட்கத்தால் வாட்டமடையும் அந்தப் புஷ்பங்களைப் பார்த்து நான் இன்பம் அனுபவிப்பேன். என் ஸலமாவினுடைய அழகிற்கு அவை ஈடாகுமா?"

ஹபீபின் மடியில் படுத்துக் கொண்டே ஸலமா அவற்றையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தாள். அவளுடைய அழுகை மறைந்தது. அவள் கொஞ்சுதலாகச் சொன்னாள்:

"நீர்த் திவலைகளால் நனைக்கப் பட்ட பாறையிலா? இனிமேல் நான் அங்கெல்லாம் உட்கார மாட்டேன்!"

"ஏன் மாட்டாய்?"

"நான் குருடியல்லவா! விழுந்து விட்டேனானால் என்ன செய்வது?"

"ஹபீபினுடைய இந்த பலமான கைகளைப் பார்! ஸலமா, இவைகளிருக்கும் வரை உனக்கென்ன பயம்?"

ஹபீப் அவளை இரு கைகளாலும் பலமாக அணைத்துக் கொண்டான். சிறிது நேரம் இருவரும் பேசவில்லை. பிறகு அவன் எழுந்தான். பிரயாணத்திற்கான சாமான்களையெல்லாம் எடுத்துக் கொண்டு தன் மனைவியைப் பார்த்து, "ஸலமா, நான் போய் வரட்டுமா?" என்றான்.

"போய்விட்டு வா. ஆனால், சீக்கிரம் திரும்பி விடு. இராக்காலத்தில் தனியாக இருக்கப் பயமாக இருக்கிறது. நீயும் இல்லாவிட்டால் இந்த இருள் மிகவும் பயங்கரமாகி விடுகிறது. அது என்னை விழுங்கி விடுவதுபோலிருக்கிறது. நான் என்ன செய்வது? அபாக்கியவதியாகிய நான் எப்பொழுதும் உனக்குத் துன்பத்தைத் தரவே வந்திருக்கிறேன்."

ஹபீப் இடைமறித்துச் சொன்னான்:

"ஸலமா, என்றுமில்லாமல் இன்று ஏன் இவ்வாறு பேசுகிறாய்? நீயே எனக்கு எல்லாம். நீதான் எனக்கு உற்ற துணை. பகலெல்லாம் உழைக்கும் உழைப்பில் ஏற்படும் களைப்பும் துன்பமும் உனது இனிய பேச்சைக் கேட்டும் அழகைப் பார்த்தும் மறைந்து விடுகின்றன. ஸலமா, உனக்கு இதெல்லாம் எப்படித் தெரியும்?"

ஸலமா பேசாமலிருந்தாள். ஹபீப் போய் விட்டான். ஸலமா அவன் சென்ற திசையையே பார்த்துக் கொண்டிருந்தாள். காலடிச் சத்தமும் மறைந்தது. ஹபீப் திரும்பிவர எவ்வளவு நேரமாகுமோ?

2

பாரத தேசத்தின் அதிபதியாகிய ஷாஜஹானுடைய மனைவியை உலகம் உள்ளளவும் மறக்க முடியாதபடி ஒரு தெய்வீக ஞாபகச் சின்னத்தை உருவாக்கி விட்டார்கள், உலகத்தின் கலா நிபுணர்கள். அவர்கள் தங்களுடைய உன்னதமான உழைப்பிற்குச் சம்பளம் பெறுவதற்காக மட்டுமல்லாமல் அரசனுடைய விலையுயர்ந்த பரிசுகளைப் பெறுவதற்காகவும் இன்று அரண்மனையில் கூடியிருக்கிறார்கள். அரசன் தன் கஜானாவிலிருந்து விலையுயர்ந்த இந்திய வைரங்களையும், மணிகளையும் அள்ளி

ள்ளிப் பரிசாக வழங்கினான். பரிசு
பற்ற கலைஞர்கள் பாதுஷாவின் தாராள
ணத்தை வாய் ஓயாமல் புகழ்ந்து
காண்டிருந்தார்கள்.

பாதுஷா என்ன நினைக்கிறான்? இனி
மல் இம்மாதிரியான ஒரு கலைக்கோயில்
லகத்தில் எங்குமே ஏற்படக் கூடாது.
தைப் பின்பற்றி எந்தச் சிற்பக் கலையும்
தான்றவே கூடாது. தாஜ்மஹாலின் நீர்
ற்றுக்களுக்கு இணையாக வேறு எங்கும்
ர் ஊற்றுக்கள் அமையக் கூடாது. இம்
ாதிரியான கலை, உலகம் உள்ளளவும்
ருவாகக் கூடாது.......

இவ்வாறு யோசித்துக் கொண்டிருந்த
ாதுஷா ஷாஜஹான், திடீரென்று ஒரு
டிவுக்கு வந்து, தாஜ்மஹாலை உரு
ாக்கிய எல்லாக் கலைஞர்களின் கைகளை
ம் வெட்டவேண்டும் என்று உத்தரவு
றப்பித்தான். ஹபீபும் அந்த உலக
ஹா கலைஞர்களில் ஒருவன். ராஜாக்
ஞயிலிருந்து அவன் மாத்திரம் எப்படித்
ப்ப முடியும்?

நான்கு நாட்களுக்குப் பிறகு, நெஞ்சு
டபடக்க உள்ளம் நடுங்க ஹபீப் தன்
ட்டை நோக்கிப் போய்க் கொண்டிருந்
ான். தனக்கு நேர்ந்த கஷ்டத்திற்காக
வன் சிறிதும் வருந்தவில்லை. மாலையாகு
ன் வந்து விடுவதாக அன்று சொல்லி
ட்டு வந்த அவன், நான்கு நாட்களுக்குப்
றகு லைலாமாவைப் பார்க்க இன்று வரு
றான். அதற்காகவே அவன் வருந்தினான்.

லைலாமா பிரக்ஞை யிழந்து கிடக்கிறாள்.
வளுடைய வாய் என்னென்னவோ
தற்றிக் கொண்டிருக்கிறது. கடைசி
ச்சு யாரையோ எதிர்பார்த்து ஏங்கு
றது. அவனும் வந்து விட்டான்.
ற்று வரை பிச்சைக்காரனாக இருந்
வன் இன்று பாதுஷாவின் தயவால்
ாகிர்தாராகி லைலாமாவின்முன் நிற்கிறான்.

ஆனால், லைலாமாவோ தன்னை மறந்து
தற்றுகிறாள்: "நம் காட்டிற்குப்
பாவோம். அருவிக் கரையில் உட்காரு
வாம். நீர்த்துளிகள் நனைத்த பாறையில்
ன் உட்காருவேன் ...... உட்கார வைப்
யா, ஹபீப்!............எனக்குப் பயமா
ருக்கிறதே!............இருள் என்னைச்
ப்பிட்டுவிடும் போலிருக்கிறதே!......
...ஹபீப், உன் கைகளின் பலத்தில்
னக்கு நம்பிக்கை இல்லை."

அவனால் பேச முடியவில்லை. நேரம்
ருங்கி விட்டது. தனது உலர்ந்த
தடுகளை நாவால் நக்கி 'தண்ணீர்'
ன்று கேட்டாள்.

ஹபீப் தவியாய்த் தவிக்கிறான். தனது
க்கதியை நினைத்து மனதிற்குள்ளேயே
வருந்தினான். என்ன செய்வான், பாவம்! சாகப்போகும் தன்னுடைய அன்பான மனைவியின் வாயில் தன்னுடைய பலம் பொருந்திய கையால் ஒரு மடக்குத் தண்ணீர் கூட ஊற்ற அவனால் முடியவில்லை.

3

தாஜ்மஹாலிலிருந்து தீப ஒளி மங்கலாகத் தெரிகிறது. பாதுஷா செங்கோட்டையின் வானளாவிய உப்பரிகையின் வாயிலிலிருந்து அதையே பார்த்துக் கொண்டிருந்தான். அங்கேதான் அவனுடைய மனைவி - ஹிந்துஸ்தானத்தின் மகாராணி - மும்தாஜ்-மீளாத் தூக்கத்தில் ஆழ்ந்திருக்கிறாள். இனிமேல் அவன் இவ்வுலகத்தில் அவளைப் பார்க்க முடியாது. அவள் உயிரோடிருந்தபோது, அவனுடன் இன்ப மநுபவித்த ஒவ்வொரு வினாடியையும் அவன் எண்ணி எண்ணிப் பார்க்கிறான். இனிமேல் அந்த இன்பங்கள் அவனுக்குக் கிடைக்கவா போகின்றன?

இவ்வளவு பெரிய சக்கரவர்த்தி! அவனுடைய புருவ மயிர் சுருங்கினால் எத்தனையோ மன்னர்களின் அதிர்ஷ்டமும் சுருங்கிவிடும். நிமிஷத்தில் எத்தனையோ மாறுதல்கள் ஏற்பட்டுவிடும். அவன் விரும்பினால், உலகத்தில் எந்தப் பொருள் தான் அவன் கைக்குக் கிட்டாது? ஆனால், அவனோ எல்லாவற்றையும் மறந்து, சென்ற காலத்தின் ஒரு வினாடியை நினைத்து மனம் புழுங்குகிறான். சின்னஞ்சிறு விஷயங்கள் அவனுடைய மனதில் புயலைக் கிளப்பிக் கொண்டிருந்தன.

* * *

ஒரு புதிய சமாதி. அதன் மேல் பூசப்பட்ட மண் இன்னும் உலரவில்லை. ஒரு மனிதன் அதன் பக்கத்தில் உட்கார்ந்திருக்கிறான். தனது கண்ணீரால் நனைந்த அந்த மண்ணை மேலும் நனைக்கிறான். அவனும் தாஜ்மஹாலைத்தான் பார்க்கிறான்—துக்கத்தோடுதான் பார்க்கிறான்! அவனுக்கு என்ன கஷ்டம் நேர்ந்தது? —எந்தக் கைகள் பாதுஷாவின் மனைவிக்கு இந்த அதியற்புதமான ஞாபகச் சின்னத்தை—தாஜ்மஹாலைச் சிருஷ்டிக்க உதவினவோ, அதே கலைப்பண்புமிக்க கைகள் இன்று அவனுடைய பிரிய மனைவி லைலாமாவின் சமாதியில் ஒரு பிடி மண்ணைக்கூட எடுத்துப் போட முடியவில்லை.

இதை பாதுஷா அறிவானா?

அறிந்தால் என்ன செய்வான்?

(ஒரு ஹிந்திக் கதையைத் தழுவியது)





VINOLIA
WHITE ROSE SOAP



சரியான உணவு
சந்தோஷ மனப்பான்மை

வீரியத்துடனும் ஆனந்த மனப்பான்மையுடனுமிருக்க பரிபூர்ண ஆரோக்கியம் முக்கியமானது. இதற்காக குழந்தைக்கு நீங்கள்

லாக்டோஜன்

கொடுங்கள். ஏனென்றால் லாக்டோஜன் நல்ல பாலை சாஸ்திரிய முறையில் தாய்ப் பாலுக்கு சமமாக தயாரித்ததும் குழந்தையின் வளர்ச்சிக்கு முக்கியமான போஷணை சாதனங்கள் உள்ளதும் ஆகும். லாக்டோஜன் எலும்புக்கு பலமும் தசை நார்களுக்கு உறுதியும் நரம்புகளுக்கு அமைதியும் அளிக்கிறது. லாக்டோஜன் இலகுவாக ஜீர்ணமாகும். ஆகையால் மிக பலஹீனமான குழந்தைக்கும் பிறந்த தினம் முதல் கொடுக்கலாம். குழந்தையின் ஆகார சம்பந்தமான தொல்லையை விலக்குங்கள். இன்றே லாக்டோஜன் வாங்குங்கள்.



"தாய்மார்களுக்கு லாக்டோஜன் புத்தகம்" — தாய்மார்களுக்கு வேண்டிய விதிகள் உள்ளன; 'நெஸ்லே' த. பெ. நெ. 180 - சென்னை 1 அஞ்சல் தபால் அனுப்பி, பெற்றுக் கொள்ளுங்கள்

PS-NL-15


மேலும்
லைப்பாய்
பழக்கத்தை அவள்
கற்றிருக்கிறாள்!



SOLE AGENTS FOR ARYAN TOOTH BRUSH

KALAPI STORES, SWADESHI MARKET, BOMBAY 2. PHONE 33188.

SUNSHINE

Glaxo

ஸன்ஷைன்

கிளாக்ஸோ

குழந்தைகளை புஷ்டியாக வளர்க்கிறது

இந்தியாவில் டிஸ்ட்ரிப்யூட்டர்கள் :

எச். ஜே. பாஸ்டர் அண்ட் கோ., லிட்.

பம்பாய் - கல்கத்தா - மதராஸ் - லாகூர்

குழந்தைகள் பராமரிப்பைப் பற்றிய சிறிய புத்தகம் 4 அணாவுக்கு ஸ்டாம்புகளை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். உங்கள் பெயரையும் விலாசத்தையும் எச். ஜே. பாஸ்டர் & கோ. லிட்., த. பெ. 202, பம்பாய் என்ற விலாசத்திற்கு அனுப்புங்கள்.

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Pre
116-119, Sladens Garden, Poonamalle High Road, Kilpauk, Madras.



யசோதரா

ஆசிரியர்: விச்வம்பரநாத் கௌசிக்

மொழிபெயர்ப்பு: ரா. வீழிநாதன்

"நேற்றுப் பயல், நீ எனக்கு உபதேசம் செய்வதாவது? என் முன் நில்லாதே, ஓடு! அவன் பெண்ணோடு சம்பந்தம் செய்து என் மரியாதைக்குப் பங்கம் விளைவித்துக் கொள்வதா? எத்தனையோ ஜமீன்தார்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள்! 'நம் பெண்ணுக்கு சுஜான்சிங்கின் பிள்ளையோடு கல்யாணம் ஆகவேண்டுமே' என்று தவம் கிடக்கிறார்கள்! அவர்களை எல்லாம் விட்டு விட்டு இந்தப் பிச்சைக்காரப் பயலுடன் சம்பந்தம் செய்துகொள்ள வேண்டுமா?" என்று எரிச்சலுடன் இரைந்தார்.

நான் எப்பொழுதுமே அப்பாவிடம் பயந்து கொண்டிருப்பேன். அன்று எனக்கு எங்கிருந்துதான் தைரியம் வந்ததோ, தெரியவில்லை. "என் கல்யாணம் அவனுடைய பெண்ணுடன் தான் நடக்க வேண்டும். இதைத்தான் நான் விரும்புகிறேன்" என்று கூறினேன்.

அப்பா கடுகடுப்புடன் "நான் இருக்கும் பொழுது நீ யார்? உன் விருப்பம் என்ன வேண்டிக் கிடக்கிறது? என் எண்ணப்படி தான் எல்லாம் நடக்க வேண்டும்" என்று சொன்னார்.

இதைக் கேட்ட நான் ஒன்றும் பதில் பேசாமல் எழுந்து வந்து விட்டேன். அப்பாவிடம் நம்பிக்கை இழந்த நான் அம்மாவை அண்டினேன். அம்மாவும் அப்பா சொன்னதையேதான் திரும்பச் சொன்னாள். 'அவர்களுடன் சம்பந்தம் செய்து கொண்டால் நமக்கு அவமரியாதைதான் ஏற்படும்' என்று சொன்னாள்.

"அவமரியாதையா? அவமரியாதை எதற்காக ஏற்படப் போகிறது? அவர்களும் நம் 'டாகுர்' சாதிதானே! அப்படியிருக்கும்போது அவமரியாதை நமக்கு ஏற்படுவானேன்!" என்று கேட்டேன்.

"அவர்கள் எவ்வளவு நல்லவர்களாயிருந்தால் என்ன? ஏழைகள்தானே! ஏழைகளுடன் நாம் சம்பந்தம் செய்து கொள்ளவாவது?"

"ஏழை என்பதற்காக நம் குடும்பத்துக்கு அவமானம் எப்படி ஏற்படும்?"

"உனக்குச் சொல்ல எனக்குத் தெரியாது. இந்தச் சம்பந்தத்தைக் கண்டு ஊர் சிரிக்கும். கூடவே கூடாது!" என்றாள்.

கடைசியில் நான் வேறு வழி தோன்றாமல் அம்மாவிடம், "நான் கல்யாணம் செய்து கொண்டால் சம்பூசிங்கின் பெண்ணைத்தான் கல்யாணம் செய்து கொள்வேன். இல்லையேல் கல்யாணமே செய்து கொள்ள மாட்டேன்" என்று சொல்லிவிட்டு வெளியே வந்துவிட்டேன்.

அப்பாவும் அம்மாவும் அதை ஒரு பெரிய விஷயமாகக் கருதவில்லை. வேறொரு இடத்தில் அவர்கள் என் கல்யாணத்தை நிச்சயம் செய்து விட்டார்கள். இவ்விஷயம் என் காதில் பட்ட நாள் முதல் என் வாழ்வே மாறி விட்டது. உண்டு களித்திருக்கும் எண்ணம் எல்லாம் என்னிடமிருந்து மறைந்து விட்டது. முன்பெல்லாம் என்னை அண்டுவதற்கே நடுங்கிக் கொண்டிருந்த கவலை இப்பொழுது இரவு பகலாக என்னை வாட்ட ஆரம்பித்து விட்டது. தகப்பனாரின் மனதை மாற்ற எவ்வளவோ பாடுபட்டுப் பார்த்தேன். அவர் உள்ளம் மாறுவதாயில்லை. "நந்து, என் சொற்படி கேட்டால் கேட்கட்டும், இல்லையேல் வீட்டை விட்டுப் போகட்டும். எனக்கு அடங்காத பிள்ளையின் முகத்தைக்கூட நான் பார்க்கமாட்டேன்" என்று அவர் சொல்லிவிட்டார்.

நான் வீட்டை விட்டுப் போவதைக்கூட அப்பா பொருட்படுத்தாமல் இருப்பார் என்று நான் நினைக்கவே இல்லை. "என்ன செய்வது?" என்ற கவலை என்னைச் சூழ்ந்து கொண்டது. வீட்டை விட்டு நான் வெளியேறத் தயார். ஆனால் சம்பூசிங்கின் மகன்

ஸோனுவை மறந்து உயிர் வாழ முடியாது. அவள் இல்லையேல் எனக்கு இந்த உலகமே அஸ்தமித்துவிட்டது போலத்தான். ஒரு நாள் சமயம் பார்த்து ஸோனுவிடம், "நீயும் நானும் இங்கிருந்து கொண்டு கல்யாணம் செய்துகொள்வது என்பது முடியாத காரியம். என்னுடைய கல்யாணத் தேதி நெருங்கிக் கொண்டிருக்கிறது. ஆகையால் நான் வெகு நாட்கள் இங்கு தங்க முடியாது. நான் வெகு சீக்கிரம் இங்கிருந்து போய் விடுவேன். உன்னை மறந்து இன்னொரு பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்வது என்பது இந்தப் பிறப்பில் நடக்க முடியாத காரியம். ஆகையால் வேறு வழியின்றி நான் வீட்டை விட்டு வெளியேறித்தான் ஆக வேண்டும். நீ என்ன செய்யப் போகிறாய்? சொல்லு" என்று கேட்டேன்.

என் வார்த்தைகளைக் கேட்ட ஸோனு, "நான் என்ன சொல்வது? உங்களைவிட அதிகக் கட்டுப்பாட்டில் நான் இருக்கிறேனே!" என்றாள்.

"ஸோனு, என்னைப் போலவே நீயும் வேறு புருஷனைக் கல்யாணம் செய்து கொள்ள முடியாது என்றால், என் பின்னோடு வந்துவிடு. அதுதான் நல்லது" என்றேன்.

இதைக் கேட்டு ஸோனு, முதலில் சிறிது பயந்தாள். ஆனால், 'நீ என்னுடன் வரா விட்டால், இந்தப் பிறப்பில் என்னை நீ மறுபடியும் காணமுடியாது' என்று நான் சொன்னதும் அழ ஆரம்பித்து விட்டாள். "நீங்கள் சொல்வதை நான் கேட்கத் தயார். இதுமாதிரி எல்லாம் அசட்டுப் பிசட்டு என்று பேசாதீர்கள்!" என்றாள்.

"அப்படியானால், என்னோடு புறப்படத் தயாராயிரு! நான் சொல்லுகிற நாள் என்னோடு புறப்பட்டு வந்துவிடு!" என்றேன்.

இதைக் கூறிவிட்டு வந்த நாள் முதல் நான் வீட்டை விட்டு வெளியேறுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து கொண்டேன். என் கையில் 500 ரூபாய் இருந்தது. இரண்டு கம்பளிகள், போர்வைகள், கூஜா முதலியவற்றையும் சேகரித்து வைத்துக் கொண்டேன். பிறகு வீட்டை விட்டு ஓடுவதற்கு வழி தேடினேன். அந்தச் சமயம் அலகாபாத்தில் நடந்த மக உத்ஸவம் பார்க்கப் போவதாகக் கூறிவிட்டு வீட்டை விட்டுப் புறப்பட்டேன். கிராமத்திற்குப் பக்கத்திலிருந்த ஒரு தோட்டத்தில் ஒளிந்து கொண்டு ஸோனுவின் வரவை எதிர்பார்த்திருந்தேன். சாயந்திரம் ஸோனு வந்தது புறப்பட்டு விட்டேன்.

என்னைத் தேடுவார்கள் என்று நா காசிக்கு டிக்கட் வாங்கிக்கொண்டு புறப்ப டேன். அங்கே இரண்டு நாட்கள் தங்கி, என கும் ஸோனுவுக்கும் வேண்டிய சாமான்களை வாங்கிக்கொண்டு, பக்கத்துக் கிராமத்தி வசித்து வந்த எனது சிநேகிதன் வீட்டுக்கு போய்ச் சேர்ந்தேன். அவன் எனக் ரொம்ப சிநேகிதன். அவனிடம் விஷய களை ஆதியோடந்தமாகச் சொன்னேன். அவன் நான் தங்கத் தன் வீட்டிலேயே இடம் கொடுத்தான். எனக்கும் ஸோனுவு கும் முறைப்படி கல்யாணம் நடந்தேறிய அவனைக் கொண்டு கிராமத்துச் செய் களையும் கேட்டறிந்தேன். சம்பூஸிங்கின் பெண்ணை அழைத்துக்கொண்டு நான் ஓ விட்டேன் என்பதை அறிந்த என் தகப்பனா "வெறும் நந்துவின் பெயரை என் மு சொல்லக்கூடாது. எனக்கு அவன் இ இருந்தென்ன, செத்தென்ன? அவன் எ பிள்ளையே இல்லை" என்று கூறிவிட்டாராம்.

ஸோனு என்னுடன் ஓடிவிட்டாள் எ பதையறிந்த சம்பூஸிங்கும் பேசாமல் இருந் விட்டார். நானும் கவலையின்றி என் வாழ் கையை நடத்தலானேன்.

கொஞ்ச நாட்கள் நான் அந்த சி நேகிதனுடைய வீட்டிலேயே தங்கியிருந்தேன். ஆனால் அங்கே அதிக நாட்கள் இருக் முடியவில்லை. ஆகையால், நான் என் தோ னிடம் விடை பெற்றுக்கொண்டு கல்கத்த வுக்குப் போனேன். அங்கே கொஞ் நாட்கள் வேலையொன்றும் இல்லாம திண்டாட நேர்ந்தது. கையிலிருந்த கா குறையக் குறைய வேலைக் கவலையும் அ கரித்தது. கடைசியில், பத்துப் பதினைந் நாட்கள் அலைந்து திரிந்து ரொம்ப சிரம பட்ட பிறகு ஒரு இடத்தில் 35 ரூபாய் சம் ளத்தில் ஒரு வேலை கிடைத்தது. அதை கொண்டு நாங்கள் எங்கள் வாழ்க்கையை நடத்தலானோம். ஏழைக் குடும்பத்திலே பிறந்து வளர்ந்த ஸோனுவுக்கு அந் வாழ்க்கை கஷ்டம் நிரம்பியதாகத் தோன் வில்லை. ஆனால், பணக்காரக் குடும்பத்தி பிறந்து வளர்ந்து நெய்யும் பாலும் வேண் மளவு உண்டு சுகவாழ்க்கை நடத்தி வ எனக்கோ, அவ்வாழ்க்கை மிகவும் கஷ்ட நிரம்பியதாகத்தான் இருந்தது. நெய்யில்லா ரொட்டி தொண்டைக்குள் இறங்க மறு த்தது. பாலைக் கண்ணால் கண்டு எத்தனையோ



நாட்கள் ஆகிவிட்டன. சோனாவை அடைந்திருந்த சுகத்தில் நான் இவ்வளவு கஷ்டங்களையும் ஒரு பொருட்டாகக் கருதவில்லை. அவளுக்காக, இன்னும் பெரிய கஷ்டங்களை அனுபவிக்கக் கூடத் தயாராயிருந்தேன். இவ்விதம் ஐந்து வருஷங்கள் கழிந்தன. அப்பொழுதுதான் ஜஸ்லோ பிறந்தான். அவன் பிறந்த ஐந்து வருஷத்திற்கெல்லாம் சோனா நோய் வாய்ப்பட்டாள். ஒரு வாரம் படுத்த படுக்கையாகக் கிடந்தாள். எட்டாவது நாள் என்னைத் தனியே விட்டு விட்டு அவள் பிரிந்தாள். அந்தச் சமயம் நான் இருந்த விதத்தை உங்களுக்கு எப்படிச் சொல்லுவேன்! ஜஸ்லோ மட்டும் பிறக்காமல் இருந்திருந்தானானால் நானும் சோனாவும் ஒரே சிதையில் அடுக்கப்பட்டிருப்போம் என்பதில் சந்தேகமே இல்லை. ஆனால் என் வாழ்க்கைக் கயிறு ஜஸ்லோவின் பிடியில் இருந்தது."

இதைக் கூறி விட்டு சந்து மௌனம் சாதித்து விட்டான். அவனுடைய கண்களிலிருந்து கண்ணீர்ப் பெருக்கு எடுத்து ஓடியது. விராஜகிசோரும் ராமநாத பாபுவும் அவனது துயரக் கதையில் மூழ்கி, அவன் முகத்தையே உற்று நோக்கிய வண்ணம் உட்கார்ந்திருந்தனர்.

சிறிது நேரத்திற்கெல்லாம் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு சந்து மறுபடியும் சொல்லலானான் :—

"ஐந்து ஆறு நாட்கள் வரை நான் ஒரு பித்தனைப் போல இருந்தேன். நான் சாப்பிடவில்லை. பக்கத்து வீட்டுக்காரர்கள் ரொம்ப பலவந்தப் படுத்தியதினால் ஏதோ கொஞ்சம் பாலைக் குடித்து அந்த ஐந்து நாட்களைக் கழித்தேன். ஜஸ்லோவையும் பக்கத்து வீட்டுக்காரர்களே கவனித்துக் கொண்டார்கள். நான் படுத்து அழுது கொண்டிருந்தேன். ஐந்து நாட்களுக்குப் பிறகுதான் என் நிலைமை எனக்குப் புலப்பட்டது. இனி கல்கத்தாவை விட்டுவிட வேண்டும் என்று நிர்மானித்தேன். சோனா இல்லாத கல்கத்தாவில் இருக்கவே பிடிக்கவில்லை. ஆகையால் ஜஸ்லோவை எடுத்துக் கொண்டு நான் நேரே என் சிநேகிதனின் கிராமத்திற்குச் சென்றேன். சிநேகிதன் வீட்டில் வந்து சோனாவின் அந்திமச்

சடங்குகளை முடித்தேன். எந்த வீட்டில் அவளுடன் எனது மணச் சடங்கு நிறைவேறிற்றோ, அதே வீட்டில் அந்திமச் சடங்கையும் முடித்தேன். விதி எதைத்தான் செய்கிறதில்லை? அச் சடங்குகளைப் பூர்த்தி செய்த பின், இனி என்ன செய்வது என்று சிந்திக்கலானேன். சிநேகிதன், 'இனி நீ வீட்டுக்குப் போய்விடு. வேண்டுமானால் உன்னைக் கொண்டு விட நான் வருகிறேன். உன் தகப்பனார் உன்னை மன்னித்து விடுவார்' என்றான். நான் அதை ஒத்துக் கொள்ளவில்லை. கிராமத்திற்குப் போனால் வேணு சம்பந்தப்பட்ட வஸ்துக்கள் எல்லாம் அவளுடைய நினைவை அடிக்கடி வரவழைக்கும்—ஆகையால் நான் கிராமத்திற்குப் போக விரும்பவில்லை. மேலும் சொந்தக்காரர்கள், ஊரார்கள் எல்லாரும், 'ராஜு நான் சுகம் போதும் போதும் என்றுவிட்டதா? வீடு வந்து சேர்ந்து விட்டாயா?' என்று ஏச மாட்டார்களா!

"இதை எண்ணியதும் வீடு போகத் துணிவு ஏற்படவில்லை. என் சிநேகிதன் சுதர்சன்சிங் எவ்வளவோ சொன்னான். ஆனால் நான் எதையும் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. கடைசியில் அவன் சலித்துக் கொண்டு பேசாமலிருந்து விட்டான். நான் ஒரு மாதம் அவன் வீட்டில் இருந்தேன். ஒரு நாள் 'அப்பா, நான் இனி இங்கு தங்க முடியாது. வருகிறேன்' என்றேன்.

'எங்கே போகப் போகிறாய்?'

'எங்கே போகப் போகிறேனா? விதி எங்கிழுத்துச் செல்லுகிறதோ, அங்கே...'

'ஒரு அர்த்தமுமில்லாமல், ஒரு நிச்சயமும் இல்லாமல் எங்கெல்லாம் போய்ச் சுற்றுவாய்? இங்கேயே இரு அப்பா!'

'இனிமேல் இங்கே இருக்க முடியாது. நீ இது வரைக்கும் செய்த உதவிக்கு நான் என்ன கைமாறு செய்யப் போகிறேன்? இனியும் உனக்கு நான் சிரமம் தரமாட்டேன்.'

'என்ன சிரமம்? கடவுள் புண்யத்திலே என்னிடம் இருக்கிறதைக் கொண்டு உனக்கும் போட்டு நானும் சாப்பிட மாட்டேனா? எனக்கு ஆகிறது உனக்கும் ஆகிறது.'

சிநேகிதனின் இந்த அன்பமொழிகளைக் கேட்டதும் என் கண்களில் கண்ணீர் பொங்கியது. 'கடவுள் புண்ணியத்திலே என் கை கால்கள் ஊனமின்றி நன்றாயிருக்கின்றன. நான் உழைத்து என் வயிற்றை வளர்த்துவிட மாட்டேனா? உனக்குச் சிரமம் தருவானேன்?' என்றேன்.

சுதர்சன் சிங், 'என்ன அப்பா, சிரமம் சிரமம் என்கிறாயே? என்ன சிரமம்? உனக்குக் கொஞ்சம் நிலம் வாங்கித் தருகிறேன். நீயே வேண்டுமானால் பயிர்த் தொழில் செய்து வயிறு வளர்த்துக் கொள். நான் உன்னைப் பலவந்தப் படுத்த விரும்பவில்லை. இருந்தாலும் பெண் சிறியவளாயிற்றே, எங்கெங்கே அலைவாய் என்றுதான் சொல்கிறேன். குழந்தை இல்லையென்றால் நான் ஒன்றும் சொல்லப் போவதில்லை' என்றான்.

'பெண் இல்லை என்றால் நான் இந்த உலகத்திலேயே இருந்திருக்க மாட்டேன். அவளுக்காகத் தானே உயிர் வாழ்கிறேன்.'


'அதனால்தான் நானும் ஒரே இடத்திலே இரு. குழந்தை சிரமம் இல்லாமல் வளரட்டும் என்று சொல்கிறேன்' என்றான் சுதர்சன் சிங்.

சிநேகிதன் சொன்னது உண்மையே. அவன் சொன்னதைக் கேட்டிருந்தால் நான் பிறகு அனுபவித்த கஷ்டத்தை அனுபவிக்க வேண்டியிராது. ஆனால் என் மனம் அந்தச் சமயம் என் வசத்தில் இல்லை. ஓரிடத்தில் தங்கியிருக்க என் மனம் இடங் கொடுக்கவில்லை. சுற்றிக் கொண்டே இருக்கத்தான் நான் விரும்பினேன். ஆகையால் சிநேகிதனின் வார்த்தைகளுக்குச் செவி சாய்க்காமல் ஒருநாள் புறப்பட்டு விட்டேன்.


• • •

இரண்டொரு வருஷங்களுக்குப் பிறகு உயிருக்கு உயிரான அந்த நண்பன் இறந்து விட்டான் என்று கேள்விப்பட்டதும் எனக்குத் துயரம் தாங்கவில்லை. கடவுள் எனக்கென உலகத்தில் இரண்டு உயிர்களைச் சிருஷ்டித்திருந்தார். ஒன்று வேணு;

துணிப் பஞ்சம்!



பயம் தீர்ந்தது!



ஆரம்பத்தில், அணுகுண்டைக் கண்டு உலகை முழுவதும் பயந்து நடுங்கிற்று.

ஆனால், இன்று — ஒன்றரை வருஷத்துக்குப் பின்னால், உலகம் அணுகுண்டைக் கண்டு பயந்து ஓடவில்லை. அதற்குப் பதிலாக, அணுகுண்டு உலகத்தைப் பார்த்து நடுங்குகிறது. ஐரோப்பிய வல்லரசுகளும் ராஜ தந்திரிகளும் பத்திரிகைக்காரர்களும் உல்லாசமாக அதைச் சுற்றி சுற்றி உலாவுகிறார்கள்.

பிகினித் தீவில் நடந்த அணுகுண்டு ஒத்திகை 'புசுபுசு' வென்று போனதிலிருந்து அணுகுண்டின் மகத்துவம் அப்படிக் குறைந்து விட்டது.

இதை 'கிரிஸ்டியன் சயன்ஸ் மானிட்டர்' என்ற அமெரிக்கப் பத்திரிகை மேலே உள்ள கூடார்த்தப் படமாக வெளியிட்டிருக்கிறது.

ற்கொன்று சுதர்சன்சிங்; இருவருமே ன்னை மொத்திவிட்டு மறைந்து விட்டனர்.

இதைச் சொல்லிக் கொண்டிருந்த சந்து, படியும் பேசாமல் கண்ணீரைத் துடைத்துக் கொண்டான்.

"உன் அப்பா இருக்கிறாரா?" என்ற கேள்வியைக் கேட்டு, அங்கு நிலவியிருந்த ந்த மௌனத்தைக் கலைத்தார் விராஜசேகர்.

"அவர் உயிருடன் இருக்கிறார் என்று இரண்டு வருஷங்களுக்கு முன்னால் கேள்விப்பட்டேன். அதற்கப்புறம் ஒன்றுமே தெரியாது" என்றான் சந்து.

"இப்படி நீ அவரை மறந்து, அவரிடம் போகாமல் இருந்து விட்டது கொஞ்சங்கூட நன்றாக இல்லை" என்றார் ராமநாதபாபு.

"என் மனம் இடங் கொடுத்தால்தானே நான் போக? நான் அவரிடம் போனால், பழைய விஷயங்களை யெல்லாம் மறந்து என்னை வீட்டிலேயே வைத்துக் கொள்ளுவார் என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை. ஆனால், சோனாவின் தாய் தந்தையரின் முகத்தில் எப்படி விழிப்பது? சோனாவை இழுத்துக் கொண்டு ஓடி விட்டு, வளைப் பலி கொடுத்த பின் திரும்ப வந்திருக்கும் என்னை மன்னிக்க அவர்களுடைய மனம் சம்மதிக்குமா? என்னுடன் முகங்கொடுத்துப் பேசத்தான் பேசுவார்களா என்று எண்ணும் பொழுது கிராமத்திற்குப் போக எனக்குத் துணிவே ஏற்படவில்லை. மனமும் இடங் கொடுக்கவில்லை. அதனால் தான் நான்......" என்று சொல்லி நிறுத்தினான் சந்து.

"உனக்கு கிராமத்திற்குப் போக எண்ணம் இருக்குமாகில் நான் அனுப்பி வைக்கிறேன்" என்று குறுக்கிட்டார் ராமநாதபாபு.

"உண்ண உணவும் தங்க இடமும் கிடைக்காத அந்த நாளிலேயே நான் போகவில்லை. உங்களுடைய புண்ணியத்திலே சுகமாயிருக்கும் பொழுது எதற்காகப் போகப் போகிறேன்? ஒரு புறம் அப்பா அம்மாவைப் பார்க்க வேண்டுமென்று ஆசை இருக்கத்தான் இருக்கிறது.

"கட்டாயம் ஒரு தடவை நீ வீட்டுக்குப் போய் வா"

"எங்கள் ஊர் ஆள் ஒருவன், லக்னோவில் இருக்கிறான். அவன் மூலமாக வீட்டைப் பற்றித் தெரிந்து கொண்ட பின் போய் வருகிறேன்."

"அப்படியானால் நாளைக்கே போய் விசாரித்து வா சேயன்!"

"இப்பொழுதே அதற்கென்ன அவசரம்! பெண்ணுக்குக் கல்யாணம் செய்வதற்காக என்றைக்காவது ஒரு நாள் கிராமத்திற்குப் போய்த்தானே ஆகவேண்டும்?"

சந்துவின் இந்தச் சொற்கள் ராமநாதபாபுவுக்கு மிகவும் வேதனையை அளித்தன. அவரது முகம் வாடி விட்டது. (தொடரும்)

டாக்டர் ராஜாமணி

ஸோமாஸ்

"ராஜாமணி, ரயில் விளையாட்டு விளையாடலாம், வா! மூன்று எண்ணுவதற்குள் ஓடி வரவேண்டும்!—எங்கே பார்க்கலாம்: ஒன்று, இரண்டு, மூன்று!" என்று திருப்பித் திருப்பி மங்களம் எண்ணிக்கொண்டிருந்தாள். ஆனால், அவள் அண்ணா ராஜாமணி விளையாட வருகிற வழியாயில்லை.


ஒன்று — இரண்டு எண்ணி அலுத்துப்போன மங்களம் வாசற்படியிலிருந்து எழுந்து விறு விறு என்று உள்ளே போனாள்.

"ராஜாமணி, ரயில் விளையாட்டு விளையாட வர மாட்டாயா?"

"நான் வரமாட்டேன், அம்மா! ரயில் விளையாட்டு விளையாடினால் 'ஸ்டிரைக்' பண்ண வேண்டி வரும். அப்புறம் மத்தியஸ்தம் பண்ணிவைக்க யாரையாவது கூப்பிட வேண்டியிருக்கும். அதெல்லாம் வேண்டாம். நான் ஒரு நல்ல விளையாட்டு சொல்லுகிறேன். விளையாடலாமா? அப்பாவுக்கு உடம்பு சரியாயில்லையென்று அம்மா சொன்னாள். நமக்கு உடம்பு சரியாயில்லாவிட்டால் டாக்டர் மருந்து கொடுக்கிறார் அல்லவா? அது மாதிரி அப்பாவுக்கு நான் மருந்து கொடுப்பேன். நான்தான் டாக்டராம்!—என்ன?" என்றான் ராஜாமணி.

"சரி; அப்படியே விளையாடலாம். நான்தான் நர்ஸாம்! — என்ன?" என்றாள் மங்களம்.

இப்படிப் பேசிக்கொண்டே இருவரும் கூடத்து அறைக்குச் சென்றனர்.



ராஜாமணி அங்கேயிருந்த ஒ[ரு] புட்டியை எடுத்துக் கொண்டான் டாக்டர் மாதிரி வேஷம் போட்டு[க்] கொண்டான். மங்களம் ஒரு கை[க்] குட்டையை யெடுத்துத் தலையி[ல்] கட்டிக் கொண்டு நர்ஸ் மாதிரி வேஷ[ம்] போட்டுக் கொண்டாள்.

டாக்டர் ராஜாமணி காலில் பூட்ஸை மாட்டிக் கொண்டு 'டக் டக்' என்[று] மாடிப்படி ஏறிப் போனான். அவ[ன்] பின்னாலேயே சென்ற நர்ஸ் மங்கள[ம்] "சத்தப் படுத்தாமல் போ. நோயாளிக்கு அதிர்ச்சி ஏற்படும்!" என்றா[ள்] சிரித்துக்கொண்டே.

மாடிக்குப் போனதும் டாக்ட[ர்] ராஜாமணி தன்னுடைய அப்பா படு[த்]திருந்த அறையின் கதவை மெ[து]வாகத் திறந்து கொண்டு உள்ளே போனான். நர்ஸ் மங்களமும் போனாள்.

"ராஜாமணி, மங்களம்! வாருங்கள்! என்ன சமாசாரம்?" என்று கட்டிலி[ல்] படுத்தபடியே கேட்டார் அப்பா.

"குட்மார்னிங், ஸார்!" என்றா[ன்] டாக்டர் ராஜாமணி.

அப்பாவும் சிரித்துக்கொண்டே "குட்மார்னிங்!" என்றார்.

"நர்ஸ், பார்த்தாயா? தொண்டை கட்டி யிருக்கிறது. நல்ல கப மருந்து கொடுக்க வேண்டும்!" என்று கூ[றி] விட்டு, "ஸார், உடம்பு சரி யில்லையாமே! நாக்கை நீட்டுங்கள் பார்க்கலாம்!" என்று கூறினான். பிற[கு] கையைப் பிடித்துப் பார்த்தான்.

"ஓஹோ, சரிதான். ஜுரம் வந்திருக்கிறது. நல்ல மிக்ஸராகத் தருகிறேன். சாப்பிடுங்கள்" என்று கூறிவிட்டு கையிலிருந்த காலிப் புட்டியை குலுக்கி விட்டு 'அவுன்ஸ்' கிளாஸை யெடுத்து அதில் மருந்து விடுவதுபோ[ல்] பாவனை செய்தான்.

"மருந்து சாப்பிடும் பொழு[து] தலையை அசைக்காமலிருக்க வேண்டும்!" என்று டாக்டர் ராஜாமணி

சொன்னதும், நர்ஸ் மங்களம் அப்பாவின் தலையைப் பிடித்துக்கொண்டாள்.

இந்த வேடிக்கைகளை யெல்லாம் சிரித்துக் கொண்டே பார்த்துக்கொண்டிருந்த அம்மாவுக்கு திடீரென்று ஒரு ஞாபகம் வந்தது. "அடாடா! இன்று காலையில் குழந்தைகள் மருந்து சாப்பிடவே யில்லையே!" என்று கூறி விட்டு மருந்து எடுத்து வருவதற்காகப் போனாள்.

தனக்கும் மங்களத்துக்கும் அம்மா மருந்து எடுத்துவரப் போகிறாள் என்பது டாக்டர் ராஜாமணிக்குத் தெரிந்து விட்டது. உடனே அவன், "ஐயோ, வேண்டாம்! வேண்டவே வேண்டாம்! ஹூம்! 'காட்லிவர் ஆயில்' நான் சாப்பிடமாட்டேன். நாற்றமாய் நாறுகிறது!" என்று கத்தினான்.

"அப்பாவுக்கு மருந்து கொடுக்கலாம் என்று ராஜாமணிதான் ஆரம்பித்தான், நான் ஆரம்பிக்கவே யில்லை! எனக்கு மருந்து வேண்டாம்!" என்று கத்தினாள் நர்ஸ் மங்களம்.

"மங்களத்துக்கு ஒரு 'டோஸ்' போதும்.—ராஜாமணி, நீ டாக்டரோ இல்லையோ! அந்த வேலை பார்ப்பதற்கு உனக்குப் பலம் வேண்டாமா? அதற்காக உனக்கு இரண்டு 'டோஸ்' கொடுக்கப் போகிறேன்!" என்று அம்மா சொன்னதைக் கேட்ட டாக்டர் ராஜாமணி விழித்தான்.

எழுந்திருக்க முடியாமல் படுத்திருந்த அப்பாவுக்கு இந்த வேடிக்கையைப் பார்த்ததும் தாங்க முடியாமல் சிரிப்பு வந்து விட்டது. அப்பாவின் வியாதியும் சௌஸ்தமாகி விட்டது.

வெளுத்து வாங்கி விட்டார்!



ஒருவர்:—பாகவதர் தியாகய்யர் உருப்படி இரண்டையும் நன்றாக வெளுத்துவிட்டார்! ஆனால் அந்த தாஜு தீக்ஷதர் உருப்படியையும் மோசம் பண்ணி விட்டார்!

வண்ணான்:—அந்த தாஜு உருப்படியையும் எங்கிட்டம் போடுங்க, சாமி! நான் எப்படி வெளுத்துக்கிட்டு வாரேன் என்று பாருங்க!

கல்கி



LKI ஆகஸ்ட் 18, 1946 4 அண

Regd. No. M. 4392

